சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத ,, ,, 4-50
3 மாத ,, ,, 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

"வறியவர்கள் நமக்குப் போதிக்கும் ஆசிரியர்களாவர். அவர்கள் நாம தருமம் செய்யவும், கிறிஸ்துவை நேசிக்கவும் நமக்குப் படிப்பிக்கிறார்கள்"
— கருதினல் மேசியர்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 25-ம் இல.

# திருச்சபையைப்பற்றிய முறைப்பாடு

"உலகின் பல பாகங்களிலுமிருந்து திருச்சபைக்கெதிராகவும் நமக்கெதிராகவும் வத்திக்கானில்வந்து குவியும் முறைப்பாடுகளுக்கு நாம் மவுனமாக இருக்க முடியாது. அவைகளெல்லாம் உண்மையாகவும் நீதியாகவும் இல்லாவிட்டாலும், நாம் அவைகளுக்கு உரிய சிந்தனையையும் கரிசனையையும் கொடுத்து வருகின்றோம்."

இவ்வாறு பாப்பரசராக தமது 7-வது வருடத்தை தொடங்கிய 6-வது சின்னப்பர், சென்றவாரம் தமது கருதினல்களுக்கு கூறினர். வழமைபோல் ரோமையிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள கருதினல்கள், முடிசூட்டுவிழாவின் நினைவு தினத்தன்று பரி. தந்தையைச் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர். "திருச்சபையைப்பற்றி பலபிரச்சினைகள் கிளப்பப்படுகின்றன. என்மேலும் பலகுற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இவைகளையிட்டு நாம் அமைதியாக தியானிக்கின்றோம்." என்று தெரிவித்தார் பரி. தந்தை.

### புதிய அறிக்கையொன்று :

பரி. ஸ்தானத்தின் பிரதிநிதிகளைப்பற்றி ஓர் புதிய அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. பிரதிநிதிகள் யார் என்பதைப்பற்றியும் அவர்களுடைய கடன் என்ன என்பதைப்பற்றியும் விளக்கிக்கூறும் இவ்வறிக்கை"சகல திருச்சபைகளின் கண்காணிப்பிற்காக" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அண்மையில் ஆயர்கள் பலர் தம் நாட்டிலுள்ள வத்திக்கான் பிரதிநிதிகள் எல்லை மீறி செயல்படுகிறார்களென்று முறையிட்டதன் காரணமாகவே இவ்வறிக்கை பிறந்திருக்கிறது.

"பிரதிநிதிகள் ஆயர்களுக்கெதிராகவோ, அவர்களிடமாகவோ இயங்குபவரல்லர். ஆனால் தேசியதிருச்சபையை பரி. ஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளச் செய்வதே அவர்கள் கடன். அந்தந்த நாட்டிலுள்ள திருச்சபையின் நிலைமையைப்பற்றித் தெரிவிப்பதிலும், அத்திருச்சபையை வழிநடத்த உகந்த குருக்களை ஆயராக சிபாரிசு செய்வதிலுமே அவர்கள் கடன் தங்கியிருக்கிறது" எனக் கூறுகின்றது அறிக்கை.

### இரு பெரிய கவலைகள் :

"இன்னும் பல மாற்றங்களை செய்யும்படி வேண்டுகோள் அதிகரித்திருக்கின்றது. இவைகளுக்கு நாம் செவிசாய்கின்றோம் என்பதற்கு இன்னுமோர் அடையாளம் இந்த ஐப்பசியில் ரோமையில் இருக்கும் ஆயர் சங்கமாகும். இப்போ திருச்சபைக்கு இருக்கும் பிரச்சினைகளுள் இரண்டு பெரிதாயிருக்கின்றது. ஒன்று, பாரம்பரியத்தில் வளர்த்த உண்மைகளை ஏற்க மறுப்பும், இரண்டாவது, திரு ஆட்சி அமைப்பாளரின் சேவையிலே நம்பிக்கைக் குறைவுமாகும்"என்றார்.

## மோல்ராதேச திருச்சபை

மோல்ராதிவின் திருச்சபையானது மிகச்செல்வம் படைத்ததுஎனச் சிலரால் கூறப்படும் பொய்யை அம்பலப்படுத்துமாறு அத்தேச அதிமேற்றிராணியார் பாரபட்சமற்ற ஒருவிசாரணைக் குழுவை நியமித்து அத்தேச திருச்சபைக்குரிய சகல கணக்கு வழக்குகளையும் யாதொரு தங்குதடையின்றி ஆராய வழிவகைகள் செய்திருக்கின்றார். குழுவின் தலைவராக ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தில் உணவுவிவசாயப்பகுதிகளில் கடமையாற்றும் ஒரு குரவரான விகுட்டி சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

## திருச்சபையின் கடமை

"திருச்சபையின் கடமை பணிசெய்து கிடப்பதேயன்றி ஆட்சிபுரிவதல்ல என்பதை மக்கள் நன்கு உணர்வார்களாகில் கிறீஸ்துவசபைகள் ஒன்றிக்கும் காலம் விரைவில்வரும்"என்பது நிச்சயம்என வத்திக்கானின் ஒற்றுமைக் காரியாலய செயலாளர் கருதினல் வில்டபிரூன்ட் அண்மையில் கூறினர். "மேலும் திருச்சபையின் முறைகளைப்பற்றி எங்கெங்கு குறை கூறுவதைக் கேட்கின்றோமோ அவற்றுக்கெல்லாம் செவிசாய்த்து உண்மையைக் கண்டுபிடிப்பது திருச்சபையின் தலைவர்களின் கடமையாகும்" என்றார் அடிகளார்.

## ஆயர் குருக்கள் பிரச்சினைதீர்க்க பரி. தந்தை தலையிடுகிறார்

ஆர்ஜென்ரீனவில் றொசாயிறோ அதிமேற்றிராணியார் பொலட்டியின புரட்சிக் கொள்கைகளுக்கு எதிராக 30குருக்கள் ராஜினமா செய்துள்ளனர். இதையிட்டு அதிமேற்றிராணியார் பல வாரங்களை ரோமையில் கழித்தபின்பு அண்மையில் றொசாயிறோ திரும்பியுள்ளார்.

பரி. தந்தை அதிமேற்றிராணியாருக்கு எழுதிய கடிதத்தில், "குருக்களின் முன்னேற்றமான பிரேரணைகளை சிறந்த மனப்பாணமையுடன் வரவேற்கவேண்டும்"என்று வற்புறுத்தியிருக்கிறார். குருக்களுக்கெழுதிய கடிதத்தில் ஆயருடன் நம்பிக்கையுடன் உரையாடல் நடத்தும்படி ஏவுதல் செய்திருக்கிறார்,

## பாரம்பரிய அமைப்பு வேண்டும்

— ஆயிரம் குருக்களின் குரலொலி

பரிசுத்த தந்தையினுடைய முதன்மையையும் ஆயர்களுடைய அதிகாரத்தையும் ஆமோதித்து ஆயிரம் குருக்கள் கையொப்பமிட்ட கடிதமொன்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஸ்பானியதேசத்தில் கற்றலோனியா மாகாணத்தைச் சேர்ந்த இக் குருக்கள் குருத்துவத்தின் விரத்தத்துவத்தைப்பாது காக்கத் தாம் போராடுவதென்று கூறியிருக்கின்றனர். தாம் செயலற்ற பிற்போக்கு வாதிகளைச் சார்ந்தவரில்லையென்றும் நவீன பிரச்சினைகளுக்கு செவிசாய்க்கும்பொறுப்பு வாய்ந்தவர்களென்றும கூறும் இக் கடிதம் மரியாயின் பக்தியையும் புனிதரின் வணக்கத்தையும் வளர்க்க முயலுகின்றதெனக் கூறுகின்றது.

## சந்திரனைப்பற்றிய தகவல் நேரடியாகப் பெற்றார் பாப்பரசர்

அப்பொல்லோ 9 இல் பிரயாணம் செய்து சந்திரனை வலம்வந்த வீரர்களில் ஒருவராகிய அமெரிக்கவீரன் மக்கில் சென்றவாரம் பரிசுத்த தந்தையைப் பேட்டிகண்டார். பேட்டியின்போது பாப்பரசர் சந்திரனின் தோற்றத்தைப்பற்றி மிகஆவலுடன் விசாரித்து அறிந்து கொண்டார்.

### ஐக்கிய அமெரிக்காவிலே

## விவாகமான டீக்கன்

சில வருடங்களுக்கு முன் அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராகவும், ஆர். ஏ. எவ். படையினரின் ஆன்மவிசாரணைக்குருக்களில் ஒருவராகவும் இருந்த வண. மைக்கல் சோல் பாதிரியார் இருவருடங்களின் முன் கத்தோலிக்க மறையில் தமது குடும்பத்துடன் சேர்ந்து கொண்டார். இவரது நற்குணங்களையும் சமயபற்றையும் கண்ட புல்ரன் ஷீன் ஆண்டகையவர்கள் இவரை அமெரிக்காவுக்கு வரவழைத்து புதியமுறைப்படி அனுமதிக்கப்பட்ட விவாகம்செய்த டீக்கனக அபிஷேகம்செய்து நமது பங்கில் தொண்டாற்ற வைத்திருக்கின்றார். டீக்கனக அனுமதிக்கப்பட்டதும் அவரது முதற்சடங்கு தனதுமனைவியாருக்கு நற்கருணைகொடுத்ததேயாம். அன்று தினம் அவரது இருவாரக் குழந்தையொன்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது,

# அமைதிக்கு சிலை எடுக்க துப்பாக்கிகளை உருக்கினர்

வட அமெரிக்காவின் "பொன் கதவு" என்றழைக்கப்படும் சான் பிருன்சிஸ்கோ பட்டணத்தார் தங்களுடைய நகரின் பகிரங்க சதுக்கத்திலே உலக அமைதிக்காக 12 அடி உயரமான சிலை ஒன்றை எழுப்பியுள்ளனர். அச்சிலை புனித பிரான்சிஸ்கு அசிசியாரின் சிலையாகும். சிலையின் பின்னே கெனடி சகோதரர்களும், மாட்டீன்லூதர்கிங், ஆபிரகாம் லிங்கன்—இவர்களின் படங்கள் "மொசயிக்" என்னும் சதுரக்கல் பதிப்பினல் இடம்பெறுகின்றன.

12 அடி சிலை செய்வதற்கு பாவனையான இரும்பு அவ்வூர் மக்கள் சரண் அடைந்த 2000 துவக்குகளையும் உருக்கி எடுக்கப் பட்டது. திரு. றொபெட் கெனடியின் கொலையைத் தொடர்ந்து, அவ்வூர் மக்கள் தங்கள் துப்பாக்கிகளைச் சரண் புகுத்தினர். ஆகையினல் இச் சிலையைத்திறந்துவைத்த நகர மேயர் யோசவ் அலிபொட்டோ கூறினர்:

"அமைதிக்குப் பாதுகாவலரான அர்ச்சியசிஷ்டவரான பிரான்சிஸ்கு அசிசியாருக்கு நாம் எமது போர் ஆயுதங்களை அர்ப்பணிக்கிறோம்".

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். வின்சென்ற் டீ போல் தருமசபை

பிறடெறிக் ஓசானம் என்பவர் பரீஸ் சர்வகலாசாலையில் விரிவுரை ஆசிரியராய் இருந்த காலத்தில் அங்கிருந்த போசிரியர்களில் பெரும்பாலானோர் பத்திவிசுவாசம் அற்றவர்களும், நிரீச்சுரவாதிகளுமாயிருந்தமையால் கலாசாலை மாணவர்களும் அப்படியே இருந்தார்கள். இப்பரிதாபமான நிலைபரத்தைக் கண்டு பத்தி விசுவாசத்தில் மிகவும் மேம்பட்டிருந்த ஓசானத்தின் மனம் புழுங்கியது.



ஆகவே இவர் தம்மோடு ஒத்துழைக்கக்கூடிய சில வாலிபரைத் தெரிந்துகொண்டு ஒவ்வொரு வாரமும் வேத தர்க்க வகுப்புகள் நடத்திவந்தார். இதனால் அநேகர் தமது பத்தி விசுவாசத்தில் தூண்டப்பட்டு நல்வழியில் நடக்கத் தொடங்கினார்கள். ஆனால் அநேக பிறசமயத்தவர்களும் கெட்டகிறீஸ்தவர்களும் அவர்களைக் கேலி பண்ணினார்கள். இவர்களையும் இவர்களுடைய தோழர்களையும் பார்த்து, "நீங்கள் போதிப்பவர்கள் ஒழியச் சாதிப்பவர்கள் அல்ல. ஏழைகளின் கஷ்டத்தை நிவாரணஞ்செய்வதற்கு உங்கள்சமயம் என்ன செய்கிறது? உங்களுடைய போதனைகளாலும், தர்க்கங்களாலும் என்னபலன் வரப்போகிறது?" என்றுசொல்லி அவர்களை லைநயாண்டி பண்ணினார்கள். இதனால் ஓசானமும், அவர் தோழர்களும் வெட்கமடைந்து ஓர் இரகசியமான இடத்தில் ஒன்றுகூடி இதைவிஷயமாய் என்னசெய்யலாமென்று ஆலோசித்தார்கள். 'பெயிலி' என்னும் ஒருபெரியார் இவர்களுக்கு உதவியாயிருந்தபடியால், இவருடைய இல்லத்திலேயே தமது முதற்கூட்டத்தைக் கூட்டினார்கள். நீர்காலோசனையின்பின் அவர்கள் எடுத்த தீர்மானங்கள் பின்வருமாறு:

1. நாம் இருவர் இருவராய்த் திரிந்து ஏழைகளின் இல்லங்களைத் தரிசித்து, அவர்களோடு அன்பாய் வார்த்தையாடி அவர்களின் தேவைகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்குவாராந்தம் உதவிசெய்ய வேண்டும்

2. பணமாகவும், பொருளாகவும் எமதிடையேயும், மற்றும் உபகாரிகளிடமும் தண்டல்செய்து அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும்.

3. ஏழைகளில் கிறீஸ்துநாதரையேகண்டு அவர்களுக்குச் சரீர உதவிசெய்யும்போது அவர்களைத் திருத்தி உத்தம கிறீஸ்தவர்களாய் நடக்கச் செய்யவேண்டும்.

4. ஒவ்வொரு வாரமும் கூட்டங்கூடி ஞானவாசினை வாசித்து, குருவானவர் ஒருவருடைய வழிநடத்துதலின்கீழ் தாம்தங்களைத்தாமே அர்ச்சிக்க வருந்தவேண்டும்.

5. அர்ச். வின்சென்ற் டீ போல் என்னும் தருமசிந்தையுள்ள ஒருபுனிதரையே தமது பரலோக பாதுகாவலராகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவ்விதமே இச்சபை உற்பத்தியானது. சிலமாதங்களின்பின் இப்படியான பந்திகளைப் பரீஸ்நகரின் பற்பலபாகங்களில் தொடங்கினார்கள். பரீஸ் நகரின் அதிமேற்றிராணியார் இவர்கள் செய்துவந்த ஆச்சரியமான வேலையைமெச்சி அவர்களுக்குத் தம்மாலான உதவியெல்லாம் செய்துவந்தார்.

இதைக் கண்ணுற்ற பிராஞ்சு இராச்சியத்தின் அநேக மேற்றிராணிமார் தங்கள் மேற்றிராசனங்களிலும் இச்சபையை ஸ்தாபிக்கும்படி ஓசானத்தை ஆவலோடுகேட்டுக்கொண்டார்கள். காலகதியில் ஐரோப்பாவின் பலநாடுகளிலும இச்சபை பரவலாயிற்று. ஓசானத்தின் சீவியகாலத்திலேயே ஐரோப்பாவில் நூற்றுக்கணக்கான பந்திகள் இருந்துவந்தன என்று அறியக்கிடக்கிறது.

(i) மேலே சொல்லப்பட்ட விபரங்களிலிருந்து இச்சபை எவ்வகையான சந்தர்ப்பத்தில் உண்டானது என்று கண்டுகொண்டோம்,

(ii) இதன் ஆதிநோக்கம் என்னவாயிருந்த தென்பதைச் சற்று ஆராய்வோம். இச்சபையின் பூர்வீக அங்கத்தவர்கள் மற்றவர்களுக்குத் தருமஉதவி செய்வதன்மூலம் மற்றவர்களையும் தங்களையும் அர்ச்சித்துக் கொள்வதையே ஏகநோக்கமாகக் கொண்டிருந்தார்கள் எனக் காணப்படுகிறது.

வறியவர்களை நாம்அடிக்கடி சந்தித்து, அவர்கள்இடும் எளிய ஆசனங்களில் கூசாமல் உட்கார்ந்து அவர்களுடைய இக்கட்டு இடைஞ்சல்களை அனுதாபத்தோடுகேட்டுச் சிநேகபான்மையாய் அவர்களோடு உறவாடுவதால், அவர்களுடைய அன்பையும்; மதிப்பையும் பெற்றுக் கொள்ளுகிறோம். ஆகவே நாங்கள் சொல்லும் புத்திமதிகளையும், அவர்கள் உள்ளத்தில் நாம் எழுப்பிவிடும் நல்லுணர்ச்சிகளையும அவர்கள் நன்றியோடு ஏற்றுச் சீக்கரம் மனந்திரும்பி வேறுமனிதராய் மாறிவிடுவார்கள் என்பதில் சற்றேனும் ஐயமில்லை

ஏழைகளின் முன்மாதிரிகையையும் தேவசித்தத்துக்கு அமைவையும்கண்டு நாம் சாங்கோபாங்கத்தில் முன்னேறுவது நிச்சயம். ஆகவே, இச்சபையின் நோக்கமானது மிகவும் உன்னதமானதே.

குடும்ப சந்திப்பு இச்சபையின் பிரதானமான ஒழுங்காய் இருப்பதால், இதைச்செய்ய ஆயத்தமாயிராதவர் இச்சபையின் காரிய அங்கத்தவராய் இருக்கவே முடியாதென்பது வெள்ளிடைமலை.

(தொடரும்)

## யாழ்-நகர் உளவியற் சங்கம்

இச்சங்கத்தின் மாதாந்த கூட்டம் சென்றமாதம் 27-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5மணிக்கு சம்பத்திரிசியார் கல்லூரி வாசிகசாலையில் இச்சங்கத்தலைவர் திரு. K. பூரணம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் வண. மைக்கல் பிரான்சிஸ் யோசப், M. A. அடிகளார் "உணர்ச்சி விருத்தி" என்றோர் சொற்பொழிவாற்றினார். ஒரு குழந்தையின் உடல், உளம், சமூகம், சமயத்துறைகளில் ஏற்படும் உணர்ச்சிகள் எவ்வாறு விருத்தியடைகின்றன என்று நன்கு விளக்கினார். ஒவ்வொரு பருவத்திலும் ஒருவரில் ஏற்படும் உணர்ச்சி விருத்திகள் எவ்வாறு வித்தியாசப்படுகின்றன என்று எடுத்து விரித்துரைத்தார். ஈற்றில், இவ்விருத்திகள் யாவும், ஒருவரின் முதிர்ச்சிக்கும், அறிவுக்கும் ஏற்க எவ்வாறு அமைகின்றன என்று கூறியதுடன் பற்பல உதாரணங்களையும் எடுத்துக் காட்டினார்.

அக்கிராசனர் திரு. K. பூரணம்பிள்ளை அவர்கள் கூறிய குறிப்புக்களுடனும், திரு. C. E. ஆனந்தராசன் அவர்கள் கூறிய நன்றியுரையுடனும் கூட்டம் நிறைவுற்றது. 35பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தனர்.

(நிருபர்.)

## பொழுதுபோக்கு

முதலாளி: (ஒருமாணவனைப் பார்த்து) உன்னுடைய விடுமுறை நாட்களில் வந்து எனக்கு வேலைசெய்கிறாயா? நல்லசம்பளம் தருகிறேன்.

மாணவன்: வாரம் ஒன்றுக்கு என்ன சம்பளம் கொடுப்பீர்கள்?

முதலாளி: 50 ரூபாகொடுக்கிறேன். ஆனால், ஒருகாரியம்மட்டும் நேரத்தோடு சொல்லிவிடுகிறேன். மணிக்கூடு வைத்துக்கொண்டு வேலைசெய்விப்பேன் என்று மட்டும் நினைக்கவேண்டாம்.

மாணவன்: அப்படியானால் நானே மணிக்கூடு கொண்டுவந்துவைத்து வேலை செய்கிறேன்.

* * *

ஆசிரியர்: (மாணவர்களை நோக்கி) பிரமச்சாரி என்றால் உங்களுக்கு யாரென்று தெரியாதென நினைக்கிறேன். தெரிந்தால் அதனை வைத்து ஒரு வசனம் ஆக்கிச் சொல்லக்கூடியபிள்ளை கை உயர்த்தலாம்.

சேகர்: (கையை உயர்த்துகிறான்.)

ஆசிரியர்: சரி, எங்கே ஆக்கிச்சொல்; பார்க்கலாம்?

சேகர்: பிரமச்சாரி பெரும் பாக்கியமான ஒரு மனிதன்.

ஆசிரியர்: உனக்கு எப்படித் தெரியும்?

சேகர்; அம்மாவுடன் சண்டையிடுகிறபோதெல்லாம் அப்பா அப்படித்தான் சொல்லிக்கொள்ளுகிறார்.

"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை"

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

**அன்னை எஸ்தாக்கி அந்தோனியா (குமாரத்தி)வின்**
**5-ம்வருட மரண ஞாபகம் — 10-7-69.**

என்றும் எமக்கினிய அம்மா! இறைவன்பதம் வாழுமம்மா!
எம்மை இங்குத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டாய் ஏனம்மா?
இன்றுடன் ஐந்தாண்டுகளும் கழிந்த தம்மா!
இன்னமுமே எம்கண்ணீர் ஓய்ந்ததில்லை பாரம்மா!
இன்பமுடன் ஒருதுணையாய் இருந்தஎங்கள் அன்புநிறை
தந்தையையும் உன்னருகே அழைத்துவிட்டாய் ஏனம்மா?
துன்பகீதம் முடியவில்லை! துயர்நெஞ்சில் மறையவில்லை!
தூயவனின் கருணையையுன் மைந்தருக்காய்க் கேளம்மா!

அந்தோனியாவின் ஆன்மசாந்திக்காக 10-7-69 வியாழக்கிழமை காலை 6-30மணிக்கு பள்ளிமுனை புனித லூசியம்மாள் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அன்பர்கள் அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி நன்றியுடன் வேண்டுகின்றோம்.

மக்கள்: இராசேஸ்வரி, றோசா மேபிள், யசிந்தா, கியோமார், நிர்மலா, கிறேஷியன், றமீலா, மெல்சின். மருகர்: எம். ஆனந்தம் றோச், எம். அல்பிறட் றோச், எம். ஸ்ரனிஸ்லாஸ் பெரேரா. சகோதரர்: தி. சூசை றோச். தி. ராசாக்குட்டி றோச். பேரர்: பிறக்ஸி, வினிசியா, மெக்ஸி.

"இராஜேஸ்வரி இல்லம்,"
பள்ளிமுனை. 75-69

* * *

**திருமதி ஆன் அருளானந்தம் அவர்களின்**
**10-ம் வருட மரணஞாபகம்**

தோற்றம்: 26-4-27 மறைவு: 8-7-59

மிகவும் இரக்கமுள்ள யேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கும்பொழுது அனுபவித்த அளவில்லாத கஸ்தி, நோவுகளைப் பார்த்து, இவவுக்கு நித்தியஒளி பிரகாசிக்கக்கடவது.

மண்ணில் மறைந்தாலும் எங்கள் மனதைவிட்டு அகலாத ஆன் அருளானந்தம் இறைவனடிசேர்ந்த 10-வதுவருடம் 8-7-69-இல் பூர்த்தியடைவதால், அன்றுதினம் இவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வல்வெட்டித்துறை, அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் காலை 6-30மணிக்கு ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், உறவினர், நண்பர் அனைவரையும் இவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி பணிவன்புடன் வேண்டுகிறோம். ஆண்டவரே, இவவுக்கு நித்தியஇளைப்பாற்றியைத் தந்தருளும்.

இவவின் பிரிவால் துயருறும் கணவர்: எஸ். ஏ. அருளானந்தம். தந்தை: தொ. தம்பிராசா. தாய்: றே. தம்பிராசா. சகோதரர்: அன்ரன் செபஸ்தியன். சகோதரி: றேஸ் அருளானந்தம். மைத்துனி: புஷ்பராணி அன்ரன். மக்கள்: மெரியன் யசிந்தா, அஞ்சலின் நிர்மலா, யோசபின்பேனடா, மைக்கல் அருள் குமார், சாந்தி. 76-69

* * *

யாழ்நகர் திருக்குடும்ப கன்னியர்மட ஆங்கில பாடசாலை மாணவி

**செல்வி றெஜீஜியா சதாநேசம் றொட்றிகஸ்**

அவர்களுடைய மறைவின்

**முதலாம் வருட ஞாபகார்த்தம்**

பிறப்பு: 4-1-1957 இறப்பு: 13-7-1968.

நித்திய பிதாவே! உமது ஏகருமாரனும் எங்கள் ஆண்டவருமான யேசுக்கிறீஸ்துவின் விலைமதியாத திரு இரத்தத்தைப்பார்த்து மரித்த றெஜீஜியாவின் ஆத்துமத்தை உமது பிரத்தியட்ச தரிசனையின் பாக்கியத்தில் சேர்த்தருளும்படி உம்மைக்கெஞ்சி மன்றாடுகிறோம்

பள்ளிப்பருவத்திலே, சிறபிள்ளைப் பருவத்திலே இறைவனடிக்கு விரைந்தோடிய எங்கள் அருமைமகள் றெஜீஜியா சதாநேசம் எங்களை விட்டுப்பிரிந்த ஓராண்டுநிறைவை, அவவைச் சேர்ந்தோர், பார்த்தோர், அவவைப்பற்றிக் கேள்விப்பட்டோர் அனைவருக்கும் ஞாபகப்படுத்தி அவவின் ஆன்மசாந்திக்காக 12-ம்திகதி சனிக்கிழமை காலை 6-15மணிக்கு ஆசனக்கோவிலில் நிறைவேறும் துக்கப் பாடற்பூசையில் பங்குபற்றி வேண்டிக்கொள்ளும்படி வெகு உருக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

52A, வேம்படிவீதி, பெற்றோர், சகோதரர்.
யாழ்ப்பாணம். 77-69

## கத். பார்வையாளருக்கு எதிர்ப்பு

இங்கிலாந்து நாட்டில், எடின்பறோ நகரில் நடைபெற்ற 'சர்ச் ஒவ் ஸ்காட்லாந்து' சபையின் பொது அவையில் கத். பார்வையாளராக (பாப்புவின் பிரதிநிதியாக) அருட்பெருந்தகை டாக்டர் தமாஸ் மர்ச்சிகன் கலந்துகொள்வதை எதிர்த்து "சர்ச் ஆவ் இங்கிலாந்து" சபையின் தீவிரவாதிகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். பின்னர் அவர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவாக்கின் வல்லமையும் வேதாகம வாசிப்பும்

"நானே ஆல்பாவும், ஒமேகாவும்; ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன். தாகமாய் இருக்கிறவனுக்கு ஜீவிய நீரூற்றில் இலவசமாய்க் குடிக்கக் கொடுப்பேன்."
(காட்சி ஆகமம் 21 ஆம் அதி. 6 ஆம் வச.)

இறைவன் மனிதருடன் உரையாடினுலன்றி, அவரை அறிந்துகொள்ள முடியாது. ஆகவே, இறைவன் தன் மக்களில் தூயஇதயமுடையோருடன் உரையாடிக் கொண்டே வந்தார், உரையாடிக் கொண்டே வருகிறார். எவ்வாறெனில் முதலில் தாம் யாரென்றும், தமது வழிகள் இவையென்றும் நாம் என்னசெய்ய வேண்டும் என்றும் முறைமுறையாக, படிப்படியாகப் பிதாப்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர், புனிதர்மூலம் மக்களுக்கு அறியவைக்கிறார். அதாவது தேவன் தமது ஏவுதலை மனிதனுக்குக் கொடுத்து, தேவவாக்கை மனிதன் தன் இயற்கைச் சூழலோடும், இயற்கை வாழ்வோடும், தெய்வீகப் பண்போடும் எழுதியதுதான் வேதாகமம்.

இத்திவ்வியநூல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களினதும், கிறீஸ்துவினதும் சீவியத்திலிருந்து தூயஆவியானவரின் தூண்டுதலால் எழுதப்பட்டது. தேவன் தமது பக்தர்களுக்கு எவ்வாறு வெளியிட்டாரோ அவ்வாறே அவர்களும் உண்மையாகவே தம்மை ஆட்கொண்ட தேவதிருவுளப்படி எழுதினார்கள். இவ்வார்த்தைகள் ஏவப்பட்டவைகளாகவும், அழைக்கப்பட்டவைகளாகவும், எச்சரிக்கப் பட்டவைகளாகவும், கற்பனைகள் கட்டளைகள் அடங்கினவைகளாகவும் இருக்கின்றன. எனவே வேதாகமத்தின் ஆக்கியோன் தேவாதிதேவனும், தூயஆவியானவரால் நிரப்பப்பட்டு இறைவனுடன் உரையாடிய மனிதனுமே. தேவகுமாரனிடத்தில தெய்வீகமும் மனுஷீகமும் இருப்பதுபோல், வேதாகமத்திலும்தேவவார்த்தைகளடங்கிய தெய்வசித்தமும், அதற்குச் செவிசாய்க்கும் மனுஷரின் ஒன்றிப்பும் அடங்கியிருக்கிறது.

இசையாஸ் 41-ம் அதி. 4-ம் வசனத்தில் கூறியிருக்கிறபடி, "இக்காரியங்களைச் செய்து நிறைவேற்றியவர் யாவர்? ஆதிமுதல் சர்வகோத்திரத்தாரையும்தோற்றுவிக்கிறவரும் ஆதியும் அந்தமுமாகிய யேகோவாகிய நானே அவர்" என்று இசையாசுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். ஆபிரகாமை அழைத்ததேவன் தமது திட்டத்தை அவருக்கு வெளிப்படுத்துகிறார். (ஆதி.12-ம் அதி. 1-ம்வச.) யேகோவா ஆபிரகாமை நோக்கி, "நீ உன் பிதாவின் வீட்டையும் உன் இனத்தாரையும், உன் தேசத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ. நான் உன்னிலேயே ஒரு மகத்தான சாதியைத் தோற்றுவித்து, உன்னை ஆசீர்வதித்து, உன் நாமத்தை மகிமைப்படுத்துவேன்" என்கிறார். அப்படியே பிதாப்பிதாவாகிய மோசேசை அழைத்ததேவன் பல அற்புதங்கள்வழியாக அவரையும், இஸ்ருயேலரையும்வழி நடத்தியவர் கற்பனைகளைக் கொடுத்து அதன் பிரகாரம் நடக்கும்படி கற்பிக்கிறார். நினிவே நகரைத் திருத்தமுயன்ற இறைவன் யோனுஸ் தீர்க்கதரிசிமூலம் எச்சரிக்கிறார். இவையெல்லாம் இறைவனின் வார்த்தை மூலமாகவே நடைபெற்றன.

இறைவன் இவ்வாறு தேவகுரலொலிக்குச் செவிகொடுத்து, தம்மைத தேவனுக்குக் கையளித்து, அவருக்குப் பணிந்து நடந்தவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களிடமாகவே தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். உரையாடிய இறைவன் புதியேற்பாட்டின் கிறீஸ்துவாக மாம்சமாகி மனிதனுனார். மனுமகன் மக்களுடன் வாழ்ந்தார். இன்றும் பலியாகி நற்கருணைமூலம் வாசமாய் இருக்கிறார். திவ்விய மீட்பர் யேசுக்கிறீஸ்துவின் அமிர்த வாக்குகளும் தம்பிதாவின் வாக்கியமாகவே இருந்தது. யேசுநாதரைச் சோதிக்கவந்த சாத்தான் கற்களை அப்பமாக்கும்படி அவரைக் கேட்டபோது, அவர் அதனை அதட்டி, "அப்பாலே போ சாத்தானே. மனிதன் அப்பத்தினுல் மாத்திரமல்ல, தேவனின் வாயில்நின்றும் புறப்படும் ஒவ்வொரு வார்த்தையி

— நாதன் —

னாலும் பிழைப்பான் என எழுதியிருக்கிறதே" என்று தம் பிதாவாகிய சர்வேசுரன் ஆயிரக்கணக்கான வருடங்களின்முன் கூறிய அதேவார்த்தையைத் தாமும் வசனித்தார். (உபாகமம் 8-ம் அதி. 3-ம் வச.) "மனிதன் அப்பத்தினுலேசீவிக்கிறதுமன்றி, யேகோவாவின் வாயினின்று புறப்படுகிற எந்தவாக்கினுலும் சீவிக்கிறுன்" என்று மோசேஸ்மூலம் கூறியஇறைவாக்கை இறைமகன் புதுப்பித்துத்தாம் மெய்யான சர்வேசுரன்என்று உறுதிப்படுத்தினார். பழையஏற்பாட்டினுல் இசையாஸ், எரேமியாஸ், மற்றும் தீர்க்கதரிசிகள், பிதாப்பிதாக்கள்மூலம் "தாமே ஆதியும் அந்தமும்" என்றுகூறிய யேகோவாவின் வார்த்தையைப் பரி. அருளப்பர் காட்சி ஆகமத்தில், "நானே அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமும்" என்று ஆண்டவராகிய கடவுள் சொல்லுகிறார். வேதாகமத்தை நல்மனமாய்த் தூய ஆவியானவரின் உதவியுடன் வாசிப்போருக்கு அவைகளில் உள்ள தேவபரம இரகசியங்கள், அவற்றின் அர்த்தங்கள் நன்கு விளங்கும். விளங்காத சில விஷயங்களைத் திருச்சபையே நமக்கு விளக்குகிறது. விளக்கத் தயாராய் இருக்கிறது. வேதாகமவாசிப்பு மனிதனில் ஒருமாற்றத்தை உண்டாக்குகிறது. அவனுக்கு ஆத்துமத்தில் ஒளியையும் புத்துயிரையும் அளித்து, தேவனை அறியச்செய்து அவரது [illegible] கடந்த அன்பையும் [illegible]யையும் ஏற்படுத்துகிறது. இவ்வித அன்பினுல், உத்தம தேவசிநேகத்தினுல் கவரப்பட்டவன் தன் நல்லதேவனுக்கு எவ்வித தியாகத்தையோ சேவையையோ செய்யத் தயங்கமாட்டான். அவன் வாசித்துஉணர்ந்த தேவவார்த்தையின் வல்லமையினுலல்லவா அவன் தன்னை மறந்து அவரைப் பின்செல்ல முயலுகின்றுன். இன்று எத்தனைகுருமார் சந்நியாசர் தேவவார்த்தைக்குச் செவிகொடுத்ததின் பயனுய், உலகையே வெறுத்துத் தேவதொண்டு செய்யத் தங்களை அர்ப்பணித்திருக்கின்றனர். நேர்நோக்கத் தேவஅழைத்தலைப் பெற்ற எத்தனைபேர் அவருக்குச் சாட்சிபகர்ந்து இரத்தம்சிந்தி உயிர்விட்டு இருக்கின்றனர்.

புதியேற்பாட்டின் இறைமகன், அன்பின் இரட்சகரின் அமுதவாக்கு நசரேத்தில், கலிலேயாவில், ஜெருசலேமில், பெத்தானியாவில், ஒலித்ததுபோல் சுவிசேஷவழியாக இன்றும் நம்காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றனவே. ஒரு வார்த்தையில், ஒரு வாக்கியத்தில் குஷ்டரோகி குணப்படுகிறுன். பிறவிக்குருடன் பார்வையடைகிறுன். மரித்தவன் உயிர்க்கிறுன். எவ்வளவு அதிசயமான சீவனுள்ள வார்த்தைகள். சுவிசேஷத்தை வாசித்தால் நம் கலக்கமடைந்த உள்ளம் எவ்வளவு தைரியம் அடைகிறது. எவ்வளவு ஆறுதல்உண்டாகிறது. இதைத்தான் நம் மீட்பர் நல்லநிலத்தில் விழுந்த விதையை விளக்கவிரும்பி, தமது வார்த்தையாகிய விதை நல்மனமுள்ள நல்நிலத்தில் விழுந்தால் நூறுமடங்காய்ப் பலன்தருமெனறுர். எப்படி? நல்மனமுள்ள கிறீஸ்தவன் உள்ளத்தில் விழுந்த தேவவார்த்தை நிச்சயமாகவே அவன சகோதரர் ஆத்துமத்திலும் விழுந்து முளைத்துப் பலன் தரும் என்பதாம். ஆகவே, வேதாகமம் கிறீஸ்தவனின் உற்ற நண்பனுகவும், புத்திபுகட்டும் போதகனுகவும், கிறீஸ்தசமயத்தின் அத்திவாரமாகவும் இருக்கிறது.

## இலங்கைத் தேசிய குருமடத்தின் ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தேசிய குருமடம் கடந்த 1967ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பல்கலைக் கழகத்தின் நிலைக்கு உயர்த்தப்பட்டு உரோமைநகரப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

1968ஆம் 1969ஆம் ஆண்டுக்கான மாணவர் தொகையில் 98 பேர் மேற்றிராசனக் குருமாணவர் குழுவையும், 39 பேர் மாசற்ற மரியாயின் தியாகிகள் சபையையும், 14 பேர் [illegible] சபையையும் சேர்ந்தவர்கள்.

# கன்னிமை குன்றுக் கன்னி

[A. ராஜ்]

மனிதன் தனிமையாயிருப்பது சரியில்லையென எண்ணிய கடவுள் ஆதித்தந்தை ஆதாமுக்கு ஏவாளைத்துணைவியாக அளித்து 'நீங்கள் பலுகிப்பெருகி உலகை நிரப்புங்கள்' (அதி. 2) என்ற அன்புக் கட்டளையைக் கொடுத்தார். அதற்கிணங்க ஆண்–பெண் ஒரே மாமிசமாயுள்ள உறவின்பயனுய் மனித இனம் பெருகிக்கொண்டிருக்கிறது. இவ்வொற்பனைக்கு மாருக இம்மண்ணகத்தில் என்றும் நிகழாத ஓர் அரிய நிகழ்ச்சி நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சி தான் என்ன? அதுதான் ஒரு பெண்ணுல் சாவு ஆரம்பித்ததுபோல் இன்னுமொரு பெண்ணுல் வாழ்வும் வரவேண்டுமென்பதற்காய் ஒரு கன்னிப்பெண்ணெருத்தியை வாழ்க்கைத் துணைவனினுதவியின்றி கருத்தரித்துவித்து மனுக்குல இரட்சகனின் தாயாராக்கப்பட்ட நிகழ்ச்சி. ஆம், யாருடைய உதவியுமின்றி, உலகத்தைச் சிருஷ்டித்த, பெண்ணுதவியில்லாது ஆதிமனிதன் ஆதாமைப் படைத்த ஆண்டவன், ஆணினுதவியின்றி ஆதித்தாய் ஏவாளை உருவாக்கிய இறைவன் ஒரு கன்னிப் பெண்ணை வாழ்க்கைத் துணைவனின் உதவியின்றிக் கருத்தருவிக்கச் செய்ததில் அவரின் அளவில்லா வல்லமை தான் தெட்டத் தெளிவாக விளங்குகின்றது. அவள் குழந்தையைப் பெற்றெடுத்தது மட்டுமன்று அவள் அதன் பின்னும் கன்னிமையை இழக்காது அதைப் பழுதறக்காத்தாள். அதனுல் தான் புனித ஜெரோம் "எப்பொழுதும் கன்னி" என்றுர். இந்தக்கன்னி யார்? இவ்வரிய நிகழ்ச்சி எங்குநடந்தது என்பதை ஆராய்வோம்.

பாலும் தேனும் பொழியும் பலஸ்தீன்நாட்டின் நசரேத்தூரில் இற்றைக்கு ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தொன்பது ஆண்டுகளின் முன்பு கிட்டத்தட்ட 14 வயது நிரம்பிய இளநங்கை ஒருவள் இருந்தாள். அவள் தான் யோக்கிம், அன்னுளின் ஏக புத்திரி. அழகு வாய்ந்தவள் அக்கன்னிகை. இவளிடம் இறைப்பண்பு, நற்பண்புகள் பலவும் குடிகொண்டிருந்தன. அவள்தான் "கடவுள் நம்மோடு" எனப்பெயர் பெறப்போகும் மகனைக் கருத்தாங்கிப் பெற்றெடுப்பாள்" என்று இசையாசும் (இசை. 2 : 14) "அவளே உன் தலையை நசுக்குவாள்" (ஆதி. 3 : 15) என்று ஆதியாகமத்திலும் கூறப்பட்ட பெண் தான் அவள். வேறு சிருட்டிப்பை இறைவன் நடத்தியிருந்தாலும் "சர்ப்பத்தின் தலையை நசுக்கக்கூடிய பெண்ணை உண்டாக்கியிருக்க முடியாது" என்கிறுர் புனித பொனவெந்தூர். அவள்தான் ஆண்டவரின் தாழ்மையும், தரித்திரமும் கொண்டவளாகிய கன்னிமை குன்றுப் பெண்–மரி எனும் நாமதேயங்கொண்டவள்.

அன்புமேலீட்டால் இறைவனன்றி வேறெவரும் இல்லையென இளவயதிலேயே கன்னிமையை அவருக்கு அர்ப்பணித்து வாழ்ந்துவரும் இம்மரியின் வாழ்விலே ஒருநாள் சூரியன் அஸ்தமிக்கும் வேளை தனதில்லந்தனில் இறைவனை வேண்டிநிற்கும் நேரம் இறைவனின் ஆணையால் தூதுசொல்லவந்த கபிரியேல் என்னும் இறைவனின் தூதன் "அருள்நிறைந்தவளேவாழ்க, கர்த்தர் உம்முடனே பெண்களிலும் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" (லூக். 1 : 28) என வாழ்த்துகின்றுர். மரியாள் இதுகேட்டு ஐயங்கொண்டாள், கற்சிலையானுள். அவரின் ஐயத்தை உணர்ந்த இறைவனின் தூதன் "மரியே நீர் கலங்கவேண்டாம். ஏனெனில், நீர் சர்வேசுரனிடத்தில் கிருபைபெற்றிருக்கின்றீர். இதோ, உமது உதரத்தில் கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப் பெறுவீர். அவருக்கு யேசு என்னும் பெயர் இடுக" என்றுர். பின்னும் அவளது நிலை அவளுக்குணர்த்தப்பட்டதும் மரியாள், "இதோ ஆண்டவரின் அடிமை; உமது வார்த்தையின்படியே ஆகட்டும் என விடை உரைத்தாள். அத்துடன் ஆதாமின் வழியாய்வந்த மரியாள் யேசுவின் தாயாகின்றுள்.

யேசுவின் தாயாக்கப்பட்டவள், இறைவனின் கரங்களில் செயலற்ற ஒரு கருவியல்ல. ஆனல், விசுவாச கீழ்ப்படிதலாலும், மனுக்குல இரட்சணியத்துக்குத் தன்னுரிமையுடன் ஒத்துழைப்பாள் என்பதன் காரணமாகவே "தன் கீழ்ப்படிதலால்தானும் மனுக்குலமனைத்தும் இரட்சணியமடையக் காரணமானுள்" என்றுர் புனித இரணேயுஸ்.

என்ன! விந்தையிலும் விந்தை இந்தஏழை மரியாளிடம் குடிகொண்டுள்ளது. இதற்குக்காரணம் அவரிடமிருந்த விசுவாசம், கீழ்ப்படிதலென்றகருவிகளேயாம். இவ்விருகருவிகளாலும், மனுக்குலத்தை மீட்கும் கருவிக்குக் கருவியானுள்.

புனித அம்புறேஸ் ஏவாளை மனுக்குலத்தின் தாயெனவும் மரியாளை இரட்சணியத்தின் தாயெனவும், வாழ்வின் தாயெனவும், ஏவாளால் சாவு, வீழ்ச்சி; ஆனல் மரியாளால் வாழ்வு, உயர்வு; ஏவையால் நாங்கள் பூமிக்குக் கொண்டுவரப்பட்டோம்; மரியாளின் மூலம் மோட்சத்தை நோக்கி உயர்த்தப்பட்டோம். ஏவாளால் மனுக்குலம் உதித்தது, ஆனல் மரியாளால் மனுக்குலத்தினதும், இரட்சணியத்தினதும் அரசர் உதித்தார் என்று கூறுகிறுர்.

ஆகவே, சகோதரர்களே கிறீஸ்தவர்களாகியநாம் மேற்கூறப்பட்டவைகளுக்கு செவிமடுத்து நடப்போமேயாகில் கன்னிமரியின் பிள்ளைகளாயிராது மறுகன்னிமரிகளாவோம் என்பதில் ஐயமில்லை.

("திருச்சபை" பற்றிய மறைக் கொள்கைத் திரட்டைத் தழுவி எழுதப்பட்டது)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழைய உடன்படிக்கையிலே தூயஆவியின் நிழல்

[வண. பிதா வே. அன்ரனி ஜோண்]

படைப்பிலே "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள்இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்," ஒழுங்கில்லாத இடத்திலே ஒழுங்கையும், இருளிலே ஒளியையும், வெறுமையான இடத்திலே உலகையும் ஆதியிலே ஆக்கியவர், படைத்தவர் தூயஆவியாகும். அன்று தண்ணீரின்மேல் அசைவாடிக் கொண்டிருந்த ஆவி தூயஆவியாகும். ஒழுங்கையும், ஒற்றுமையையும், புதுப்படைப்பையும் கொண்டு வருகிறவர் பரிசுத்த ஆவியாகும். உலகின் ஆரம்பத்திலே தமது படைக்கும் அலுவலை ஆரம்பித்துள்ளார் பரிசுத்த ஆவி. படைப்பைப் புனிதப்படுத்துவதும் தூயஆவியின் வேலையாகும். றூவா அல்லது நெயுமா என்று ஆதியிலே அழைக்கப்பட்டவர் பரிசுத்த ஆவியாகும். புதுப்பிப்பதும் புத்துயிர் அளிப்பதும் இவருடைய முக்கிய அலுவலாகும். ஆதியாகமம் 1, 2இல் இந்த அலுவலை ஆற்றுகிறார் தூய ஆவி.

**தெரிந்தெடுக்கப்பட்ட மக்களிலே:** இஸ்ரேயேலர் என்னும் மக்களை உலகம்நன்கு அறியவில்லை. ஏனெனில் பூகோளத்தில்கூட இந்தமக்கள் சீவிப்பதாக உலகமாந்தர் அறியவில்லை. காரணம் இவர்கள் எல்லாவிதத்திலும் பிற்போக்கர்களாய், ஒருகலையிலும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய் இருக்கவில்லை. இப்படிப்பட்ட மக்களை (கடவுள்) பரிசுத்த ஆவி தெரிந்தெடுத்தார். மக்கள்என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் கடவுளின் விசேடமக்களாக, எல்லாச் சமுதாயத்தைப் பார்க்கிலும் உயர்த்தப்பட்டனர். இதைச் செய்தவர் பரிசுத்த ஆவியாகும். தூயஆவியானவர் இந்த மக்களிலே இயங்கினார், இவர்களை வழிநடத்தினார்.

**அரசர்களிலே:** அரசர்களைத் தூயஆவி தெரிந்தெடுத்து, மக்களை ஆளுவதற்குப் பரிசுத்த தைலத்தால் அபிஷேகம் செய்யப்பட்டனர். தலைவர்கள் தூயஆவியின் அர்ச்சிக்கும் அருளால் மக்களை ஆட்சிசெய்தனர். சொலமன், தாவீதுஎன்பவர்கள் பேர்பெற்ற அரசர்களாவர்.

**இறைவாக்கினர்களிலே:** இறைவாக்கினர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் என்பவர்கள் இஸ்ரேயேல் மக்களின் இதயக்குமுறலாய் இருந்தனர். இவர்களைத் தூயஆவி தெரிந்தெடுத்துத் தனது அறநெறியைப் போதித்துவந்தார். தூய ஆவியின் ஏவுதலால் தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் கூறினார்கள்; இறைவனின் நற்செய்தியை மக்களுக்கு எடுத்தியம்பினார்கள். தூயஆவியினால் தீர்க்கதரிசிகள் நிரப்பப்பட்டவர்களாய் இருந்தார்கள். தூயஆவி தாம்விரும்பியபடி தீர்க்கதரிசிகளைப் பாவித்தார். ஜோவெல் என்னும் தீர்க்கதரிசி தூயஆவியினால் மக்களின் புதுப்பித்தலைப்பற்றிக் கூறினார். ஜோயெல் 2: 28— "மாம்சமான யாவர் மேலும் என்ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் மூப்பர் சொர்ப்பனங்களையும், வாலிபர்கள் தரிசனங்களையும் காண்பர்.

**மெசியாவில்:** மெசியா தூயஆவியினால் நிரப்பப்பட்டிருப்பார்எனத்தீர்க்கதரிசிகள் கூறினர். (இசையாஸ் 42 : 1.) ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது; அவர் என்னை அபிஷேகம் செய்தார்; புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்த என்னை அனுப்பினார்.

---

" பிரார்த்தனையானது
காலையில் திறவுகோல்;
மாலையின் தாழ்ப்பாள்.
பிரார்த்தனையின்போது
**இதயமில்லாத சொற்கள்** படைத்திருப்பதைவிட,
**சொற்களில்லாத இதயம்** படைத்திருப்பது
விசேஷம்."

மகாத்மா காந்தி
1869—1969.

---

# பரி. தந்தையும் ஆயர்களும் கூடிச் செயல்பட வேண்டும்

"பரிசுத்ததந்தை தனியாக இயங்காது, உலக ஆயர்களுடன் சேர்ந்து கூட்டுச் செயல் மூலம் இயங்க வேண்டும். இப்படிச் செயல் படுவது அவருடைய முதற் தன்மைக்கு முரணாகாது" என்று ஒல்லாந்து தேசக் கருதினால் அல்பிரிங் கூறியிருக்கிறார். பாப்பரசரின் தினத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய கருதினால் இந்த வருடத்தில் ரோமையில் நடைபெறவிருக்கும் ஆயர் சங்கத்தைப்பற்றி பேசுகையில், "ஆயர் சங்கங்களின் பிரதிநிதிகள் ரோமைக்கு அழைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் பரி. தந்தையுடன் உண்மையான, நேர்மையான, திறந்த மனப்பான்மையுடன் உரையாடுவார்களேஒழிய, ரோமையில் ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டவைகளை அறியச் செல்லுபவர்களல்ல. அப்படியாயின் எமது மறுமலர்ச்சியின் அமைப்பு அழிந்துவிடும்என்றார்."

# மக்கள் வாழ்வில் மாண்புயர் நற்கருணை

முன்னேற்றம் சீர்திருத்தம் என்று எக்காளம்இடும் இப்பாருலகம் பரமனையும் பிறனையும் மறந்து வாழ்கின்றது. பிறனோடு தன்னை இணைக்கும் ஆற்றல்மிக்க சாதனத்தை அறியாமல் இருக்கின்றது. மனிதன் மனிதனுக்கு நரியாகமாறி, ஏமாற்றிவாழ வழிதேடுகிறான். முன்னேற்றத்தில் முன்னிற்கும் உலகம் விண்ணக வாழ்வைப் பாழாக்குகின்றது. பகையும் சண்டையும் சமுதாயத்தைப் பிளவுபடுத்துகின்றது.

## இணைக்கும் சாதனம்

இப்பிளவைச் சமப்படுத்தி சகோதர மனப்பான்மையை ஏற்படுத்த ஐக்கியசங்கங்களும் நிறுவனங்களும் முயன்று வருகின்றன. ஆனால் பல்வேறு நாடுகளின் — சமூகங்களின் கருத்து வேறுபாடுகள் இந்த நிறுவனங்கள் முற்படும் ஒருமைப்பாட்டிற்குத் தடையாக இருக்கின்றன. இதனால் இம்முயற்சிகள் அதிகபலனை அளிப்பதில்லை. மாந்தர் அனைவரின் உள்ளக்கிடக்கையை முற்றும்அறிந்து ஊடுருவிப்பாயும் சாதனம்தான் இந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும். இத்தகைய சாதனத்தைத்தான் மனிதன் தேடி அலைகின்றான், மனிதனைப் பிறனுடன் பின்னிப் பிணைத்து, பிறர் அன்பை ஊட்டி, சமுதாய நன்மைகள் புரிய உந்தித்தள்ளும் சாதனம்தான் அன்பின் அருட்சாதனமாகிய நற்கருணை. இதை உட்கொள்ளுவதனால் கிறிஸ்துவழியாகக் கடவுளோடு இணைக்கப்படுகின்றோம். கடவுள் தம்மையும், தம்வரங்களையும் நமக்கு அருளுகின்றார். கிறிஸ்துவில் உருமாற்றம் அடைகின்றோம். நாம் உண்ணும் உணவு நம்உடலின் பாகமாக மாறுகின்றது. ஆனால், நாம் உட்கொள்ளும் நற்கருணை நம்மைத் தன்உருமாற்றுகின்றது. அதாவது: "நாம் கிறிஸ்துவில் உருமாறுகின்றோம்" என்று புனித அகுஸ்தீனார் கூறுகின்றார். இறைவனோடு நெருங்கி இணைக்கப்படும் மக்கள் தங்களுக்குள் ஒருவர் ஒருவருடன் தொடர்புகொள்ளாமல் இருப்பது எங்ஙனம்? இந்தத்தொடர்பின் பிணைப்புத்தான் நம் சமுதாய வாழ்வில் மிளிர வேண்டும். ஆனால் இந்தப் பிணைப்பில் நாம் வாழ்கின்றோமா? ஒரே பந்தியில் இறைமக்களாகிய நாம் அமர்கின்றோம். உயர்வுதாழ்வு என்ற வேறுபாடின்றி நற்கருணை உட்கொள்ளுகிறோம். ஆனால் வாழ்வில் இந்த ஐக்கியம் தொடர்கின்றதா?

ஆதித் திருச்சபையில் இந்தப்பிணைப்புச் சிறந்துவிளங்கியது. "அப்பம் ஒன்றாய் இருக்கையில் அந்த ஒரேஅப்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் நாம் எல்லோரும் அநேகராயினும் ஒரே உடலாக இருக்கிறோம்" என்னும் புனித சின்னப்பரின் வாக்குக்கொப்ப அன்றைய மக்கள் நற்கருணை உட்கொள்ளுவதனால்தம்வாழ்வில் இந்த ஐக்கியத்தையும் அன்பின்பிணைப்பையும் காண்பித்தார்கள். இவர்களின் ஒன்றிப்பானது பிறமக்களுக்குப் பிரமிப்பையும், ஆச்சரியத்தையும் கொடுத்தது மட்டுமல்ல, அவர்களையும் அந்த அன்பின் பந்தனத்திற்குக் கொண்டுவர வழிவகுத்தது.

இடைக்காலத்தில் நற்கருணை ஒற்றுமையின் அடையாளம் என்றகருத்து மறைந்து ஆராதனைக்குரிய அருட்சாதனம் என்றகருத்து வளர்ந்தது. இதனால் மக்களுக்குள் ஒன்றிப்பு மனப்பான்மை வலுக்குன்றியது வத்திக்கான் சங்கத்தின் வளமிக்க போதனைகளால் மீண்டும் நற்கருணை ஒன்றிப்பின் அடையாளமாக மிளிர்கின்றது.

## சக்தி உள்ள உணவு

நற்கருணை சாதாரணஉணவு போன்று ஐக்கியத்தைக் குறித்துக் காட்டும் வெளி அடையாளம் மட்டுமல்ல; அந்த ஐக்கியத்தை நடைமுறையில் சிறந்தவிதத்தில் செயல்படுத்தக் கூடிய சக்தியைக் கொண்டுள்ளது. இந்தச்சக்தி நம்மில் செயல்பட வேண்டுமானால் நாம் நம்மை இழக்கவேண்டும். நம் விருப்பங்களை விட்டு இறைவன் விருப்பை நாட வேண்டும். இவ்வாறு நம்மைத் தியாகம் செய்வதால் நாம் இறைவனோடு ஐக்கியமாகின்றோம். அவரைத் தந்தையாகக் கொண்டுள்ள எல்லா மக்களோடும் சகோதர பந்தனத்தால் பிணைக்கப் படுகின்றோம். இப்பிணைப்பில் உள்ள மக்கள்சமூகம், அன்புள்ளஐக்கியமுள்ளசமூகமாகச் செயல்படும்.

## நம் பணி

சமாதானத்தையும், அன்பையும் இவ்வுலகில் நிலவுறச் செய்வது ஒவ்வொரு கிறீஸ்துவமகனின் கடமையாகும். இன்றையஉலகில் ஒவ்வொரு விசுவாசியும் ஓர் ஒளிப்பிளம்பாக— அன்பின்மையமாக— தன்னுடைய சூழ்நிலையைப் பக்குவப்படுத்தும் ஒரு புளிக்காரமாகத் துலங்கவேண்டும். "தன் ஆன்மாவில் எந்தஅளவில் கடவுளோடு ஒன்றுபட்டு வாழ்கின்றானோ அந்தஅளவிற்கு அவன் ஒளியாக— புளிக்காரமாகத் துலங்குகின்றான். உண்மையாக ஒவ்வொரு மனிதனும் தன் உள்ளத்தில் கடவுள் விரும்பும் ஒழுங்கை அமைத்து, தனக்குள் அமைதியை ஏற்படுத்தினாலொழிய அவனியில் அமைதியை ஏற்படுத்த முடியாது" என்று பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பர் தமது நிருபத்தில் கூறுகின்றார். ஆகவே ஒவ்வொரு மகனும் தன் உள்ளத்திலும், சூழ்நிலையிலும் இறைவனின் சமாதானத்திற்கு வழிவகுக்க வேண்டும். இப்பணியே இக்கால மக்களாகிய நமக்கு இறைவன் விடுக்கும் செய்தி. இதற்கொப்ப செயல்படுவோமாகில் இறைவன் விரும்பும் கிறிஸ்துவில் புதுஉலகைக் காண்போம். இதற்கு வழி மாண்புயர் நற்கருணை ஒன்றே.

—பங்கிராஸ்

# கத்தோலிக்கர் கொம்யூனிஸ்தராம்

தென் அமெரிக்காவில் பிறேசில் தேசத்தில் முற்போக்கு வாதிகளான கத்தோலிக்கரையும் அத்தேசத்தின் பிறபோக்குத்தனமுடைய அரசாங்கம் கொமியூனிஸ்தரென குற்றஞ் சாட்டித் தண்டித்து வருகின்றது. அத்தேசத்தில் சமூகநீதிக்காக வாதாடிப் போராடிவரும் தலைவர்களுள் அதிமேற்றிராணியார் கமெரு ஹெல்டர் அடிகளாரும் ஒருவர். இவருடைய மேற்றிராசனத்தில் இளம் கத்தோலிக்க வாலிப தொழிலாளர் அத்தேச அரசாங்கத்தினால் பலவகைகளில் தண்டிக்கப்பட்டு வருகின்றனர். இளைஞருக்கு ஆன்மகுருக்களாகத் தொண்டாற்றிவந்த இரு குருமார் அண்மையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதிமேற்றிராணியார் ஹெல்டர் அடிகளார் வறியவர்களுக்காக பெரும்பாடுபட்டு வருபவர். "மரக்குரிசு மேற்றிராணியார்" ரென அவர் அழைக்கப்படுவது தெரிந்த விஷயமே.

---

# மறுசமயங்களும் எமது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியன

வத்திக்கானில் பிறசமயத் தொடர்புகளுக்கென அண்மையில் நிறுவப்பட்ட காரியாலயத்தின் உப-செயலாளராகிய அதிவந்தனைக்குரிய ரொசான்னோ அடிகளார் சென்றவாரம் கொழும்பு அக்குவைனஸ் சர்வகலாசாலையின் புனித பிரான்சிஸ் சவேரியார் சபையினரின் ஆதரவின்கீழ் நடாத்தப்பட்ட கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார். அச்சொற்பொழிவில் அவர் கூறிய யோசனைகளின் சுருக்கம் பின்வருவனவே:

❁ பிறசமய வெறுப்பு எம் மத்தியிலிருந்து அறவே அகற்றப்படவேண்டும்: தேவ முறை அதுவே:

❁ கிறீஸ்தவ சமயம் மறுசமயங்களுடன் உள்ளதொடர்பின் தன்மையை நாம் யாவரும் நன்குஉணர வேண்டும்.

❁ புனித பேதுருவானவர் நமக்குக் கற்பித்திருப்பது போல நாம் சகலருடனும் சமாதானத்தில் வாழ்ந்து எமது நல்லொழுக்கத்தால் பிறரை மனந்திருப்பவேண்டும்.

❁ சமூகமுன்னேற்றம், சமாதானம், ஒழுக்கம், கலாச்சாரம் முதலிய பல துறைகளில் சகலசமயத்தினருக்கு எமது முழுஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அப்பம்!

மாவடிக் கிராமம். அடர்ந்து உயர்ந்து வளர்ந்த மாமரங்கள் அக்கிராமத்தின் அழகை ஒருபடி உயர்த்திக்கொண்டிருந்தன. அதனால் போலும் அக் கிராமம் அப் பெயரைப் பெற்றது. குலை குலையாய்த் தூங்கும் கனிந்த பழங்கள்—காலையிலும் மாலையிலும் ஆடும் கிளைகளில் பாடி மகிழும் பறவைகள்—மரப் பொந்துகளில் மறைந்து மதுசேர்க்கும் தேனினங்கள்—காய்கறித் தோட்டங்கள்—ஆனிரைகள் இப்படியே அக் கிராமத்தின் அழகை வர்ணித்துக்கொண்டே போகலாம்

இத்தகைய கிராமத்திலும் வறுமையின் கோரப்பிடி கொடுங்கோலாட்சி செய்தது. ஆனால் எங்குமல்ல... அதோ அங்கு நான்கு ஐந்து தென்னை மரங்கள்உயர்ந்துவளர்ந்துகாட்சியளிக்கின்றனவே, அங்கு சென்றால் அதைக் காணலாம் — தென்னோலைகளினால் வேயப்பட்ட சாதாரண குடிசை—அதன் சொந்தக்காரர் ஆம் அதைப்பற்றிக் கூறவே பயமாயிருக்கிறது. பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் அக் கிராமத்தையே ஆட்டிவைத்த பயங்கர அம்மை வியாதி இந்தக் குடிசைச் சொந்தக்காரரையும் விழுங்கிவிட்டது. அவரைப்பற்றியறிய இன்னும் என்ன இருக்கிறது.

— இ. பேர்ணுட் —

அவர் விட்டுச்சென்ற அன்பு மனையாள் குணவதியும் மகள் குணமணியும் குடியிருக்கின்றனர். குணவதியென்றால் சிறு குழந்தைகூட அவள் வீட்டை அடையாளம் காட்டிவிடும். காரணம் அவளின் குணமும் அவள் செய்த தொழிலும் தான். அப்பம் சுட்டு விற்பதிலே இவர்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. பத்து வயதுச் சிறுமிதான் குணமணி, தாயைப்போல் பிள்ளை யல்லவா? ஆம் குணமணியும் குணத்திலே குறைந்தவளல்ல.

அதிகாலை டண்டாண்...... டண்......டாண் என மாதா கோயில்மணி அடித்தது—கடமையைக் கண்ணாகக் கொண்ட குணவதி எழுந்து குணமணியையும் எழுப்பிவிட்டு யந்திரம்போல் வேலை செய்கிருள். பங்குனிமாதமாகையால் பனி குபீர... குபீர் என்று கொட்டிக்கொண்டிருந்தது. இறுகப் போர்த்திருந்த போர்வையைச் சிறிது நீக்கினுள்—எழுந்து தன் கடமைகளை எல்லாம் முடித்துவிட்டு அன்னையருகே அமருகிருள்.

உஸ்...உஸ்... என்ற ஓசையும் அப்பத்தின் நறுமணமும் அரைகுறைத் தூக்கத்திலிருந்த அயலவரைத் தூக்கத்திலிருந்து எழுப்பின. அப்பங்களை எடுத்து அழகாகப் பெட்டியில் அடுக்கிக்கொண்டேயிருந்தாள் குணமணி. 'வேலை ஒருவாறு ஓய்ந்தது பெட்டியைத் தூக்கிவிடம்மா' என்றதும் குணவதி ஓடோடிச் சென்று பெட்டியைத் தூக்கி வைத்துவிடுகிருள். ஏன் பெட்டி அவ்வளவு பாரமா? இல்லை; அம்மா மட்டும் பெட்டியைத் தூக்கிவைத்தால் அது வெகு இலகுவாக இருக்கும். அம்மா வருகிறேன் என்று கூறிவிட்டு செல்லுகிருள் கிராமத்துக்கு. சின்ன அடியெடுத்துவைத்துச் சிட்டாய்ப் பறக்கிருள். எட்டு மணிக்கு முன் வீடு திரும்ப வேணுமே; அப்போதுதான் அவள் பாடசாலைக்குச் செல்ல முடியும்.

குணவதியின் அப்பம் என்றால் அதுவும் குணமாகத் தானே இருக்கும். கிராமமக்கள் பேச்சு இது. பனியையும் குளிரையும் பொருட்படுத்தாது சித்திரப் பாவைபோல்



## அப்பம்!

செல்லுகிருள் குணமணி. "அதோ குணமணி அக்கா அப்பம் கொண்டுவாரு" என்று அடம்பிடித்து அழும் குழந்தைகளுக்கு ஆறுதல் கூறிக் காத்துநிற்பர் பலர்.

கொடுக்கவேண்டிய இடங்களுக்குக் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்புகிருள். காலையுணவை முடித்துப் பாடசாலை செல்கிருள். குணமணி கல்வியில் அவ்வளவு சிறந்தவள் அல்ல; வீட்டில் வேலை அதிகம், படிப்பதற்குத் தான் நேரம் எங்கேகிடைக்கப்போகிறது? ஏதோ என் பிள்ளை எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் என்ற எண்ணத்துடன் போலும் குணவதி அவளை அனுப்பிவந்தாள்.

பாடசாலை முடிந்ததும் மற்றப் பிள்ளைகளைப்போல் விளையாட்டுக்குச் செல்லமாட்டாள். வீட்டில் வேலை அதிகமல்லவா? இரண்டு நாட்களாகக் குணவதியை இந்தப்பக்கமே காணவில்லை. மக்கள் பேச்சு இது. பனி என்றும் குளிர் என்றும் பாராது உழைத்ததின்பயன் இது. குணமணிக்கு இப்போது கடும் காய்ச்சல். பழைய பாட்டிமாரின் எட்டு மருந்துகளைக் கொடுத்து ஒருவிதத்தில் காய்ச்சல் குறைந்திருந்தது. குணமணி குணமடையும்வரை குணவதியே அப்பம் கொண்டுசெல்வாள்.

நாட்கள் பல நகர்ந்தன. அன்று பாடசாலை விடுமுறை நாள். கிராமத்திலுள்ள ஒரு குடும்பம் வெளியூர் சென்றபடியால் அப்பம் சிறிது எஞ்சியிருந்தது. மணி பத்தையும் தாண்டிவிட்டது. ஏழை—செல்வர்—பெரியோர் சிறியோர் எனப் பேதமில்லாது கதிரவன் தன் அக்கினிப்பிழம்புகளால் காய்ச்சிக்கொண்டிருந்தான்.

ஆ...ஊ...என்னகொடுமை! கால் அடி கூடக் கொப்பளித்துவிட்டதே என்று வீதியால் போவோரும் வருவோரும் பொரிந்துதள்ளினர்.

அதோ ஓர் உருவம், வயது 60ஐயும் தாண்டிவிட்டதென அவர் தலை காட்டுகிறது. பசிக்களைப்பினால் நடக்கவும் முடியாதவராகித் தள்ளாடித் தள்ளாடி வருகிருர்; குணவதியின் குடிசையை நெருங்கிவிட்டார். 'அம்மா! அம்மா!!' வந்தவர் அழைத்தார். குணவதி வெளியே வந்தாள். 'சிறிது களைப்பாயிருக்கிறதம்மா சிறிது இங்கே தங்கி'...என மழுப்பினுர் பெரியவர். இப்படிப்பட்டவர்களைக் கண்டால் குணவதிக்கு பொறுக்கவே முடியாது. 'உள்ளே வாருங்கள்' என அன்பாக அழைத்தாள்—மயங்கிவிழும் நிலையில் இருந்த பெரியவரைத் தாங்கிப்பிடித்துக்கொண்டாள் குணவதி—வெளித் திண்ணையில் உட்காரவைத்து அவசரமாகக் குணமணியை அழைத்தாள். ஓடிவந்த குணமணி காற்று வீசிக்கொண்டிருந்தாள்— மயக்கம் தெளிந்துவிட்டார் பெரியவர்.

தேநீர் தயாரித்து அன்று எஞ்சியிருந்த அப்பங்களையும் கொண்டுவந்து அவர்முன் வைத்தாள். 'தாராளமாகச் சாப்பிடுங்கள்' என்றதும் பெரியவர் வியப்புடன் 'இவை எல்லாம் எதற்கம்மா' என்ற வினவைத் தொடுத்தார். "அப்பா எங்களைப்போன்று ஏழைகள் நாம் வந்தபோது ஒன்றையும் கொண்டுவந்ததில்லை. போகும் போது எதையும் கொண்டு போவதுமில்லை. இருக்கும் போது எல்லோரிடமும் அன்பாகவிருந்தால் அது ஒன்றே போதும். இப்போது திருப்தியாகச் சாப்பிடுங்கள்" என்ருள் குணவதி சாப்பிட்டு முடிந்தபின் சிறிது களைஆறிவிட்டு, 'அம்மா இந்தாருங்கள்'என்று ஒரு ரூபாய் நோட்டை நீட்டினுர் பெரியவர்.

## அப்பம்!



"அப்பா நீங்கள் நினைப்பது போல் இது சாப்பாட்டுக் கடையல்ல; அன்பும் இன்பமும் பொங்கிவழியும் குடிசை. மனிதனுக்குப் பணம் பெரிதல்ல. பணம் எமக்கு வேண்டாம். இப்போது வெய்யில் அதிகமாகவிருக்கிறது. இன்று இங்கேதங்கி நாளை அதிகாலை செல்லுங்கள்." பெரியவர் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. அன்று அங்கே தங்கினுர். அடுத்தநாள் அதிகாலையிலே எழுந்து தேநீர் உணவு தயாரித்து பெரியவரை உபசரித்து அனுப்பினர். "அம்மா உங்கள் உதவியை என்னுயிர் உள்ளவரைக்கும் மறக்கமாட்டேன், அடுத்தவாரமும் இவ்விடம் வருவேன்". "இல்லையப்பா அடுத்தவாரம் மட்டுமல்ல ஒவ்வொருநாளும் இங்கு வாருங்கள்".

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கிழவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒருவாரம் ஓடி மறைந்தது. அன்றும் பாடசாலை விடுதலையானபடியால் குணமணி பாடசாலைக்குப் போகவில்லை. பெரியவர் வந்தார். ஆனல் தனிமையில் வரவில்லை. அவர் தம்முடன் கொண்டுவந்தார் ஒரு ஆட்டுக்குட்டியை. "இதை எங்கு கொண்டுவந்தீர்கள் அப்பா?" குணவதிகேட்டாள். "வேறு எங்குமல்ல; இங்குதான் கொண்டுவந்தேன். உங்கள் அன்புக்கு இதுதான் என் பரிசு". நன்றியைக்காட்டுவதுபோல் குணவதியின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. துக்கத்துக்குரிய கண்ணீர் அல்ல, ஆனந்தக் கண்ணீர் அது. இப்படி நடக்கும் என்று நாம் எதிர்பார்க்கவேயில்லை. என்று கூறியபடி குட்டியின் கயிற்றைப் பற்றிக்கொண்டாள். முற்றத்தில் நின்ற மாமரத்திலே அதைக் கட்டினுள் குணமணி. இப்போது குணமணிக்கு ஒருவேலை கூடிவிட்டது. ஆனல் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. முதுகிலே தடவிக்கொடுப்பதும் கட்டியணைத்து முத்தமிடுவதும் அதைப் பராமரிப்பதும் அவளது தினசரிவேலைகளில் ஒன்ருனது.

வருடம் ஒன்று உருண்டோடியது—குணவதி குணமணி ஆகியோரின் வாழ்க்கையை வளம்படுத்தவே இப்பரிசு அவர்களுக்குக் கிடைத்தது. முதல் ஈற்றிலே இரண்டு கடாக் குட்டிகளை ஈன்று கொடுத்தது. குணமணியின் மகிழ்ச்சியைக் கூறவும்வேண்டுமா?

## ஆறு முகன்

மாடுகளின் கொட்டிலொன்றில்
மண்ணுறங்கும் வேளையிலே
வாடாத தாமரையாய்
மலர்ந்த முகமொன்று!

பன்னிரண்டு வயதினிலே
பண்டிதனுய்த் திகழ்ந்தபோது
வெண்ணிலவு வடிவில் எழில்
விரித்த முகமொன்று!

திருமுழுக்குப் பெற்றகால்
தெளிந்த இளங்காலையிலே
கருங்கடலில் இருந்துஎழும்
கதிர்பொலிந்த முகமொன்று!

மறுருபம் கொண்டகால்
மலைமுடியில் இருந்து
உருகிவரும் பனியென
உருவான முகமொன்று!

சிலுவையிற் தொங்கையில்
செம்பவளம் போல
உலகுக்குத் தோன்றிய
உதிர முகமொன்று!

கல்லறையை விட்டெழுந்து
கடவுள்நிலை கொண்டபோது
சொல்லினிலே எழுதவொண்ணு
சோதிமய முகமொன்று!

"வாகரை வாணன்"

---

தாய்: கமலா, ஏன் உனது கத்தரிக்கோலைக் கொண்டு போய் ரீச்சரிடம் கொடுத்தாய்?

கமலா: அவ எனக்குத் தரும் வீட்டுப்பாடங்களை வெட்டிக் குறைக்கட்டும் என்று கொடுத்தேன்.

---

## கருதினுலுக்கும் குருவுக்கும் ஒரே சம்பளம்

பிரான்சின் தலை நகரான பரிஸ் மேற்றிராசனக் குருக்கள் எல்லோருக்கும் ஒரே அளவான சம்பளம் கொடுக்கப்படும். இதுவரையும் வருமானம் கூடிய பங்கிலுள்ளவர்கள் கூடிய சம்பளத்தையும் மற்றவர்கள் குறைந்த சம்பளத்தையும்பெற்று வந்தனர். ஆனல் இப்போ அந்த வேறுபாடு நீக்கப்பட்டு, எல்லாக் குருக்களும் ரூபா 600 மாதாந்தம் பெற்றுக் கொள்ளுவார்கள். இளைப்பாறிய குருக்களும் இதே சம்பளத்தைப் பெறுவார்கள்.

பங்குச் சங்கங்களிலுள்ள பொதுநிலையினர் நிதியை நிர்வகிப்பர்.

அம்மேற்றிராசன அதிமேற்றிராணியார் கருதினல் மார்ட்டியும் தம் மேற்றிராசனக் குருக்களுக்குரிய சம்பளத்தையே பெறுவார்.

---

● யேசுசபை அதிசிரேஷ்டரான பெட்ரூே அறுப்பே சுவாமிகள் சமீபத்தில் போலாந்துக்கு விஜயஞ்செய்து அரசாங்க அதிகாரிகளையும், கருதினல் வைசின்ஸ்கி ஆண்டகையையும் சந்திக்கலாயினர். அந்நாடுமுழுவதிலும் 700யேசுசபைக் குருமார் தொண்டாற்றி வருகின்றனர். அந்நாட்டைத் தரிசித்த முதலாவது யேசுசபை அதிசிரேஷ்டர் இவரே.

---

## இந்தக் கல்லின்...


(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யாபேர்க்கும் இவ்வதிகாரத்தில் பங்குண்டு என்பது வெள்ளிடைமலை.

இவ்வாறே ஏனைய அருட்சாதனங்களை (தேவதிரவிய அனுமானங்களை) நிறைவேற்றித் திவ்விய பூசைப்பலியை ஒப்புக்கொடுத்துத் திருச்சபையின் மந்தைகளைப் போஷிக்கும் பணியில் பாப்பரசர் மேற்றிராணிமார் குருமார் சகலரும் ஈடுபட்டு எமது திருமீட்பர் அவர்களுக்குக் கொடுத்த (அர்ச். இராயப்பர் மூலம்) "என் ஆட்டுக் குட்டிகளைப் போஷிப்பாயாக"; "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்ற கட்டளையை நிறைவேற்றிவருகின்றனர்.

வருடத்தில் ஒருமுறை நாம் பாப்பரசர் தினத்தைக் கொண்டாடும்பொழுது எமது தற்காலப் பாப்பரசரும் அவரின் சகாக்களும் கொண்டிருக்கும் எமது திரு மீட்பரின் அதிகாரத்தையும், அவர்களுக்குள்ள வழுவாவரத்தையும் அவர்கள் தினமும் எமக்காகச் செய்துவரும் புனிதப் பணியையும் நினைவுகூர்ந்துவருகிரோம். இத்தினத்தில் விசேஷமாக உலகெங்கும் பாவியிருக்கும் எமது திருச்சபையை ஆண்டுநடத்தி வரும் எங்கள் திருத் தந்தை ஆறும் சின்னப்பபாப்பரசர், எங்கள் மேற்றிராணி (யாழ்ப்பாணத்தில்) ஆண்டகை மற்றும் குருமாபினர் யாவரும் எமக்குச் செய்துவரும் திருத் தொண்டிற்கு நன்றி கூறுவது எமது அருங்கடனுயிருக்கிறதன்ரூே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்புள்ள தம்பி - தங்கையரே, வணக்கம்!

"கல்வியே கருந்தனம், கல்லாதோர் விலங்குகள் போன்றவர்கள், கற்றோரே கண்ணுடையவர், கல்வி கடலிலும் பெரிது, கற்கை நன்றே. பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றெல்லாம் கல்வியைப்பற்றிப் பலர் புகழ்ந்து போற்றினர்; போற்றுகின்றனர்.

ஆனால், திருவள்ளுவர் கடவுள் பக்தியில்லாத கல்வியினால் என்ன பிரயோசனம்? என்கிறார். "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்" என்பது அவரது பாட்டு. கல்வி மூளையை நிரப்பும்போது கடவுளும் இருதயத்தில் நிறையவேண்டும். கடவுள் பக்தி இல்லாத கல்வி, 'பிறேக்' இல்லாத மோட்டார் வண்டி போன்றது. பிறேக் இல்லாத மோட்டார் வண்டி வேகமாய் ஓடினால் ஆபத்தல்லவா? கடவுள் ஞானமற்ற அணுக் குண்டு, சலவாயுக் குண்டு என்ற விஞ்ஞானக் கல்வி உலகைப் படுத்தும் பாடு உங்களுக்குத் தெரியும்தானே? ஐயோ, எத்தனை அபாயம்!

இதனாற்றான் "கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியே" என்று கடவுளைப்பற்றி ஒரு பக்தர் பாடினார். கடவுளே கல்வி என்பது அவரது கருத்து. கல்வியின் முடிவும் பேறும் கடவுளையடைதலே என்பதின் கருத்து உங்கட்கு விளங்குகிறதா? ஆண்டவர் — யேசுபெருமான் பன்னிரண்டு வயதில் ஆலயத்திற் படித்த வேத பண்டிதர்களுடன் வேதக் கல்வியை விவாதித்த திறமை அவருக்கு எப்படி வந்தது? அந்தக் கல்வி கடவுட் கல்விதான். ஏன்? "படியாத இந்த நசரேயனுக்கு இவ்வளவு ஞானம் எங்கிருந்து வந்தது?" என்று ஆண்டவருடைய பிரசங்கத்தைக் கேட்ட யூதர் வியந்தனர். ஆண்டவருடைய கல்வியை நாமும் கற்றால் எவ்வளவு பாக்கியசாலிகள்? அதை விட்டு பிறேக் இல்லாத வண்டிகளாக நீங்கள் நாட்டிலே உலாவக்கூடாது. பிள்ளைகளே, கவனம்!

— அண்ணா


# பல்லாண்டு வாழியவே!

— அ. ம. நேசம் —

உலகு எங்கும் உண்மை ஓங்கிட
அலகை வாழ்வு அறவே நீங்கிட
திருமறை உண்மை திக்கெங்கும் பரந்திட
அருள் நிறை தந்தாய் ஆட்சிசெய் வீரே!

✠

சங்கம் ஒன்றை
நன்றே கூட்டி
எங்கும் திருமறை
பரம்பிட வேண்டி
மாற்றம் பலவும் [த்த
மகிழ்வுடன் அளி
கொற்றவா நின்தாள்
போற்றி! போற்றி!



✠

செங்கரம் நீட்டி
சபைகள் பலவும்
ஒன்றே சேர்த்திட
விரைந்து சேவை
பொங்கு மகிழ்ச்சி
யுடன் ஆற்றிடும்
எங்கள் பாப்பு [வே!
பல்லாண்டு வாழிய

✠

சிறுவர் நாமும் சேர்ந்திடுவோமே
சின்னப்ப தந்தை தினம் கொண்டாடிட
ஆடல் பாடல் அழகுறக் காட்டி
அன்புத் தந்தையை மகிழ்விப்போமே!

✠

என்றும் நன்றே வாழ்ந்திடவே
தொண்டு பலவும் புரிந்திடவே
இறைவா அருளே சுரந்திடுவீர்
மறை முதல்வன் நன்றே வாழ்ந்திடவே.

## காவலன் சிறுகதைப் போட்டி முடிபுகள்

பரிசு பெறுவோர்:

1-வது — எஸ். எக்டர், 10-ம் வகுப்பு, சென்: லூசியாஸ் ஆங்கில பாடசாலை, கொட்டாஞ்சேனை.

2-வது — ரா. மதிவதனா, 10-ம் வகுப்பு, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

போட்டியில் பங்குபற்றியோர் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

## "கிறுக்கன்" விஞ்ஞானியான விந்தை

அமெரிக்க இளைஞன் ஒருவன் தன் வீட்டில் உள்ள ஒரு கோழி தனது முட்டைகளை அடைகாத்துக்கொண்டு இருப்பதைக் கண்ணுற்றான். அவனுக்கு அது ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மறுநாள் காலையோ அக்கோழி அடைகாத்ததன் பயனாக அம்முட்டைகளிலிருந்து ஒவ்வொரு சிறிய குஞ்சுகள் வெளிவந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோ அளவு கிடையாது.

அடுத்த கணம் அவனது சிந்தனை வேலை செய்ய ஆரம்பித்தது. கொஞ்சக் கோழி முட்டைகளை எங்கிருந்தோ வாங்கிவந்தான். தனிமையான ஓரிடத்திற்குச் சென்றான். அம் முட்டைகளைத் தரையில் சிறிது மணலைப் பரப்பி மெதுவாக வைத்தான். அதன்மேல் ஒவ்வொருநாளும்சிலமணிநேரம் அவை உடைந்துபோகாதவாறு உட்கார்ந்து கோழியைப்போல் அடை காக்க ஆரம்பித்துவிட்டான்.

இதைக் கண்ட பெற்றோர் அவனைப் பார்த்துக் கேலியாக, "என்னப்பா செய்கிறாய்? வெட்கமில்லையா?" என்று வினவினர். ஒருசிலர் அவனைப் பார்த்து, "கிறுக்கன்" என்று கூடக் கேலி செய்தனர்.

அவ்விளைஞனோ தன்னைப் பார்த்துக் கேலிசெய்த பெற்றோரையும் பிறரையும் நோக்கி, "கோழி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கிறது போல் நான் ஏன் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கக் கூடாது? கேவலம், கோழியால் முடிகிறது மனிதனால் ஏன் முடியக் கூடாது?" என்று பொறுமையாகப் பதில் கூறினான்.

இளமைப் பருவத்திலேயே தன் சிந்தனையைச் சிறந்ததொருஆராய்ச்சியில் செலுத்திப் பொதுமக்களால் "கிறுக்கன்" என்று கேலி செய்யப்பட்ட அவ் விளைஞன்தான் பிற்காலத்தில் விஞ்ஞானத் தந்தை என்று பெயர் வாங்கி உலக சேமத்திற்கான சினிமா, கிறாமபோன், தந்தி, மின்சார விளக்குப் போன்ற எண்ணற்ற விஞ்ஞானப் பொருள்களைக் கண்டுபிடித்த தோமஸ் ஆல்வா எடிசன் என்பவராவர்.

எம். குமார்

# பெற்றோரைப் பேணுதல்

(காவலன் 'சிறுகதைப் போட்டி'யில் முதற்பரிசு பெற்ற கதை)

[செல்வன் எஸ். எக்டர்]

இலந்தை மரத்தடியில் அமர்ந்திருந்த அமலனின் நினைவெல்லாம் இரண்டு நாட்களுக்கு முன் கொழும்பிலிருந்துவந்த நண்பன் யோசேப் அமலனைத் தன்னுடன் கொழும்பில் வந்து தங்கியிருக்குமாறு அழைத்ததுபற்றியே.

அமலனும் கொழும்புக்குப் போக ஆசைப்படத் தொடங்கினான். ஆசை அதிகரித்து வெறியாக மாறியது. எப்படியும் கொழும்புக்குப் போக வேண்டுமென்ற தீர்மானத்துடன் வீட்டினுள் நுழைந்தான்.

அமலனின் தந்தை எலும்பு நோயாலும் அவன் தாய் இருதய நோயாலும் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு கிழவிதான் தினமும் வந்து சமைத்துவிட்டுப் போவாள்.

அன்று இரவு மூவரும் அமர்ந்து உணவு உண்ணும்போது அமலன், "அப்பா நான் கொழும்புக்குப் போகிறேன்" என்றான். அவன் தந்தை அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "மகனே நாங்கள் இருவரும் நோயால் வருந்தும்போது நீ எங்களை விட்டுப்போனால் எங்கள்நிலை என்னவது? மேலும் நீ அங்கு போனால் கெட்டுப்போய்விடுவாய்" எனப் பரிவுடன் கூறினார். அமலனின் தாயோ தன் மகனை விட்டுப் பிரிந்திருக்க முடியாமல் கண்ணீர் வடித்தாள். ஆனால் அமலனோ இவற்றைப் பொருட்படுத்தாமல், நான் கண்டிப்பாக நாளைக்குக் கொழும்புக்குப் போகப்போவதாகக் கூறிவிட்டு உறங்கச் சென்றான்.

மறுநாள் இரவு அமலன் புறப்படுவதற்கு ஆயத்தமாகப் பெட்டியுடன் தாய்தந்தையரிடம் விடைபெற வந்தான். அவன் தந்தை அவனுக்குச் சில புத்திமதிகள் கூறி பயணச் செலவாகச் சிறு பணத்தைக் கொடுத்தார். தாயோ "மகனே நீ அங்கு போய் நல்லபிள்ளையாக இரு. தினமும் கோவிலுக்குப் போ" என்று கண்ணீர் வடிந்தபடி விடை கொடுத்தாள்.

அமலன் கொழும்பை அடைந்ததும், யோசேப்பின் அறையை அடைந்தான். யோசேப்பும் அவன் நண்பர்களும் அவனை வரவேற்றனர். யோசேப் அவனை அங்கு தங்கியிருக்குமாறு கேட்டுக்கொண்டான், அமலனும் அதற்குச் சம்மதித்தான்.

நாட்கள் பறந்தன. இப்போது அமலனுக்குக் கொழும்பில் தெரியாத இடமே கிடையாது. அவனைச் சுற்றி எப்போதும் சிறு நண்பர் கூட்டமிருந்தது. இப்போது அமலன் கோவிலுக்குப் போவதையே விட்டுவிட்டான். கடவுளையே மறந்தான். வேலையும் கிடைக்கவில்லை. கெட்ட குணங்கள் பல அவனைப் பிடித்துக் கொண்டது. நண்பர்கள் கூட்டம் பெருகிக்கொண்டே போயிற்று. அவன் நண்பர்களில் எலியாசும் ஒருவன். அவன் மிகவும் நல்லவன்; ஒழுக்கமானவன்; தெய்வபக்தியுடையவன். அப்படிப்பட்டவன் எப்படித்தான் அவனுக்குப் பழக்கமானானோ!

ஒருநாள் ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்குப் போக அமலனும் அவன் நண்பர்களும் ஆயத்தமாகிக்கொண்டிருக்கும்போது எலியாஸ் அமலனைப் பார்க்க அங்கு வந்தான். அவர்கள் நடனக் காட்சிக்குப் போவதாக அறிந்ததும் அமலனிடம் விடைபெற்றான். அமலன் அவனையும் தன்னுடன் வரும்படி அழைத்தான்.

[மறுபக்கம் பார்க்க]

# இயற்கை

— சி. சுதந்திரராஜா —

பார் வெளுக்கும் போதிலே — பூங்குயில்
பாட்டு இசைத்துக் காட்டுது பார்
கார் மேகம் குவிந்திடவே — மாமயில்
களிப்பில் குளித்து ஆடுது பார்.

❊

அந்தி மாலை வேளையிலே — வான
அழகுப் பூச்சுக் கலவை பார்
மந்தி தாவும் மரத்திலே — தேனீ
மாடி வீடு கட்டுது பார்.

❊

வீழ்ந்து ஓடும் அருவியிலே — மீனும்
வாழ்ந்து காட்டும் விந்தை பார்
தாழ்ந்த வாழைக் கன்றுக்கே — தாய்
தன்னைத் தந்து மாழுதல் பார்.

❊

வெங்கதிர் வெம்மை தணியத் — தென்றல்
வாசனை கொண்டு வீசுதல் பார்
செங்கதிர் சாய்ந்திடும் வேளையிலே — ஆம்பல்
சிங்காரச் சிரிப்புச் செய்யுது பார்.

❊

கருநீல வான எல்லையிலே — கடல்
கருத் தொருமித்துச் சேருதல் பார்
இருளில் உலகு மருளவே — விண்மீன்
இருளினை அகற்ற முனையுது பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (Ordinary Level)

# கிறிஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

— சிஸ். அன்ரனி யோசவ் —

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

வினு 3: லூக்காஸ் சுவிசேஷம் அவரால் எழுதப்பட்டதென்று நிருபிக்க உட்சான்றுகள், வெளிச்சான்றுகள் காண்பி.

**சுருக்கம் :—**

மூன்றும் சுவிசேஷத்தை ஆக்கியோன் லூக்காஸ் தான் என்பதற்குச் சான்றுகள் கூறுக?

**1. வெளிச்சான்றுகள்:**

லூக்காஸ்தான் 3-ம் சுவிசேஷத்தின் ஆக்கியோன் என்பதற்கு பல பழைய எழுத்தாளர்கள் சாட்சி கூறுகின்றனர்.

1. முராட்டோறியன் துண்டு (கி. பி. 140). அதாவது முராட்டோரி கண்டெடுத்த ஒருபுத்தகத்தின் பாகம் "மூன்ருவதாக, சுவிசேஷப் புத்தகம் கிறீஸ்துவின் ஆரோகணத்துக்குப பின் புனித பவுலு தமது தோழர்களுள் ஒருவரும், ஒரு வைத்தியருமான இந்த லூக்காஸை ஏற்றுக்கொண்டார்" இவர் அருளப்பரின் பிறப்பிலிருந்து எழுதத் தொடங்கினர்.

2. இரேனியுஸ்(கி. பி.180). "பவுலின் தோழனுன லூக்காஸ் பவுல் போதித்த சுவிசேஷத்தை ஒரு புத்தகத்தில் எழுதினர்." (பதிதருக்கு எதிர் 3/1).

3. அலெக்சான்ரியாவின் கிளமெந்து (கி. பி. 195). "3-ம் சுவிசேஷத்தை லூக்காஸ் என்னும் பெயரின்கீழ் குறிப்பிடுகின்ருர்."

4. ரேற்ருலியன் (கி. பி. 200)"லூக்காவின் சுவிசேஷம் வெளிவந்த காலம் தொட்டு ஓர் எதிர்ப்புமில்லாது அது ஏற்கப்பட்டது.

5. ஒறிஜின் (கி. பி. 220). நான்கு சுவிசேஷங்கள் மாத்திரம் எல்லா இடத்துத்திருச்சபையினுலும் ஏற்கப்பட்டவை. (லூக். விரித்...1).

6. யுசேவியஸ்(கி. பி. 300). மூன்ருவதாக பவுலுவினுல் அங்கீகரிக்கப்பட்ட லூக்காஸ் எழுதிய சுவிசேஷம் (திருச். சரி. 3/25).

7. ஜெரோம்(கி. பி. 350). அந்தியோக்குவின் வைத்தியனும் பவுலுவின் சீஷனும் அவருடைய பிரயாணங்களின் தோழனும் தமது பேர் கொண்ட சுவிசேஷத்தை ஆக்கியோனுமான லூக்காஸ் என்கிருர்.

8. உரோமையின் கிளமெந்து(கி. பி. 175). தனது விரித்துரைகளிலும் அந்தியோக்குவின் தியோபிலசும் (கி. பி. 170), வேதசாட்சியுமான யஸ்தீனும் (கி. பி. 130). தங்கள் புத்தகங்களிலும் 3-ம் சுவிசேஷத்தை லூக்காஸ்தான் எழுதினுர் என்று ஏற்றுக் கொள்ளுகிருர்கள்.

9. ஆதியில் (கி. பி. 180). சீரிய, லற்றீன் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமநூல்களில் லூக்காசின் சுவிசேஷத்தை அவருடைய தலைப்பெயருடன் காண்கின்றோம்.

10. நொஸ்ரிக்கர் என்னும் பதிதர்களுள் பசிலிடஸ் வலண்ரீனஸ், மாசியன் என்பவர்களும் எபியோனைற்ருரும் லூக்காஸ் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து மேற்கோள்களை உபயோகித்து இருக்கிருர்கள்(கி. பி. 130).

**2. உட்சான்றுகள் :—**

3-ம் சுவிசேஷத்தை தனிப் பரிசோதனை செய்யுமிடத்தில் அதை ஆக்கியோன் ஒரு வைத்தியனுன கிரேக்கன் என்பது தெளிவு 3-ம் சுவிசேஷத்தை அப்போஸ்தலர் நடபடிகளோடும், புனித பவுலின் நிருபங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்தால் அதை ஆக்கியோன் லூக்காஸ் தான் என்று அத்தாட்சிப்படுத்தலாம்.

3-ம் சுவிசேஷத்தை அப்போஸ்தல நடபடிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவை இரண்டினையும் ஒரே ஆசிரியன் எழுதினுரென்று பின்வருவனவற்றிலிருந்து கணிக்கலாம்.

1. இரண்டினையும் ஆசிரியர் முகவுரையில் "தியோபிலஸ்"என்பவருக்கு அர்ப்பணித்து இருப்பது மாத்திரமல்ல நடபடிக்கையில் சுவிசேஷத்தை "முந்தின பிரபந்தம் என்று கூறி, சுவிசேஷ முடிவில் விட்ட விஷயத்தோடு (அதாவது ஆரோகணத்தோடு) நடபடிகளைத்தொடங்குகிருர்.

2. இரண்டிலும் மாத்திரம் புதிய ஏற்பாட்டின் மற்றப்புத்தகங்களில் பாவிக்கப்படாத 150 விசேஷ சொற்கள் காணப்படுகின்றன.

3. யேசுவின் மரணத்தில் ஏரோது எடுத்தபங்கு இரண்டிலும் மாத்திரம் குறிக்கப்பட்டிருக்கின்றது (லூக். 23/6—12). (நடபடிகள் 4/27).

4. இரட்சணியம் சகலருக்கும் உரியது என்பதும் செபஞ்செய்வது பிரதானமான காரியமென்பதும் இவ்விரண்டு புத்தகங்களிலும் விசேஷ அம்சங்களாக அமைகின்றன.

5 இரண்டிலும் ஒரு வைத்தியன் வியாதிகளை நுணுக்கமாக விவரிக்கிறதாகத் தோன்றுகின்றது(லூக். 4/38, 8/43/22/44) (நடபடிகள் 3/7, 12, 23, 13/11, 13/11).

6. இரண்டு விபரங்களும் ஒரே விதமான பயணம்போல் அமைக்கப்பட்டிருக்கின்றன. நடபடிக்கையின் சம்பவங்கள் ஜெருசலேமில் தொடங்கி ரோமாபுரியில் முடிவடைகின்றன. அதேபோல் மூன்றும் சுவிசேஷமும், நசரேத்தில் தொடங்கி ஜெருசலேமில் முடிவடைகின்றது.

7. இரு புத்தகங்களையும் ஒரு கிரேக்க எழுத்தாளன் எழுதியிருக்கிருரென்று தோன்றுகிறது. விசேஷமாய் முகவுரைகளிலே கிரேக்கவசனங்களையும் காண்கின்றோம்.

8. அப்போஸ்தலரின் நடபடிக்கையை ஆராயுமிடத்து அதை எழுதியவர் புனித சின்னப்பரின் தோழனுக இருக்கிருர் என்று அறியக்கிடக்கிறது. ஆகையால் இத்தோழன்தானே 3-ம் சுவிசேஷத்தையும் எழுதினுரெனக் கணிக்கலாம்.

9. புனித சின்னப்பரின் நிருபங்களை ஆராயுமிடத்து அவருடைய தோழர்களுள் வைத்தியனுனவனும் கிரேக்க சாதியைச் சேர்ந்தவனும் லூக்காஸ் ஒருவனேயென அறியலாம். ஆகையால் 3-ம்சுவிசேஷத்தை எழுதியவர் லூக்காஸ் என்று நிச்சயமாகக்கூற இடமுண்டு.

(வரும்)

# இலங்கைத் தேசிய குருமடத்தின் முதல் பட்டமளிப்பு விழா

"கடந்தகால அறுவடையின் பயனைப் பாதுகாக்கும் அதேநேரத்தில் நிகழ்காலத்தின் தேவைகளை நிவிர்த்தி செய்வதற்காக நாம் நமது கொள்கைகளையும், நாளாந்த செயல் முறைகளையும் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளோம். ஒரு குருமடமாணவன் குருமடத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தையும் மற்றும் வசதிகளையும் பாவிப்பதிலும் பிரயோசனப் படுத்துவதிலும், நல்நோக்கமும் ஒழுங்கான முதன்மைப் பாடும் கொண்டவனுக இருத்தல்வேண்டும்."

மேற்கண்டவாறு இலங்கைத் தேசிய குருமடத்தின் அதிபர் தவத்திரு—டல்ஸ்ரன் போப்ஸ் அவர்கள் இம்மாதம் 16ஆம் திகதி, அங்கு முதல் முறையாக நடந்த அதன் பட்டமளிப்பு விழாவில் கடந்த ஆண்டின் அறிக்கையைச் சமர்பபித்துப் பேசும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியபோது ஒவ்வொரு குருமட மாணவனும் தன் வாழ்வில் இறைவழிபாட்டிற்கும், கல்விக்கும் முதலாம் இரண்டாம் இடங்களை அளித்தபின்பே பங்கு, சமூக, கலாச்சாரப்பணிகளில் ஈடுபட வேண்டுமென்று வலியுறுத்தினன்ருர். மேற்படிவிழாவிற்குத் தலைமை தாங்கிய அப்போஸ்தலிக்க ஸ்தானத்தின் பிரதிநிதியான அதி. வண. லூசியானே ஸ்ரோறேரூ அடிகளார் அவர்கள் இலங்கைத் தேசிய குருமடத்தில் பயின்று இறை இயலுக்கான பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்ற பதினுன்கு இளங் குருமாருக்கு அவர்களுக்கான நற்சாட்சி இதழ்களையும் பரிசுகளையும் அளித்தபின் நிகழ்த்திய தலைமை உரையில், குருமட மாணவர்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அடிப்படையானதும், அத்திவாரமானதுமான ஆத்மீகத் துறையும், கோட்பாடுகளும் என்றும் நிலைத்திருக்குமென்றும், ஆனல் இடை இடையே இதுசம்பந்தமாக மாற்றங்கள் நிகழுமென்றும் உரோமைநகர் குருமட மாணவர்களுக்கு பரிசுத்த தந்தை 6ஆம் சின்னப்பர் ஆற்றிய உரையின் முக்கிய கருத்தையே எடுத்தாண்டு விளக்கினர்.

இத்தினத்தை முன்னிட்டு அன்று காலை யாழ்ப்பாண மறைமானில துணை ஆயர் அருள்திரு. எல். ஆர். அன்ரனி ஆண்டகை அவர்களோடு சேர்ந்து 14 குருக்கள் கூட்டுப்பலி ஒப்புகொடுததனர். திருப்பலிநேரத்தில் தாம் நிகழ்த்திய திருவுரையில் தங்கள் குருமட கால சீவியத்தின் போது, தங்களது ஆத்மீக வாழ்வை ஆழமானமுறையில் வளர்த்தால் அது அவர்களின் எதிர்காலப்பணிக்கு மிகவும் உதவுமென்று அங்கு சூழ்ந்திருந்த குருமட மாணவர்களுக்கு ஆயர் அவர்கள் எடுகதுரைத்தார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# கருதினலின் நீண்ட கால்நடைப் பிரயாணம்

செல்வங்குன்றிய நாடுகளின் தாபரத்துக்காக செல்வம்படைத்தநாடுகளிடையே கிளர்ச்சிசெய்து பணம்சேர்த்து உதவுவதே கனடாதேச குவெபெக்கநகர 63வயது நிறைந்த கருதினல் ரோய் அவர்களது 21மைல் நிறைந்த கால்நடையின் நோக்கமாகும். அவருடன் 12000 பேர் இப்பிரயாணத்தில் பங்குபெற்றனர். நடந்த ஒவ்வொரு மைலுக்கும் பல டொலர்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது கருதினலவர்கள் கொட்டிய கடும்மழையையும் பொருட்படுத்தாது 21மைலேயும் நடந்துசென்று 6,300 டொலரைப் பெற்றுக் கொடுத்தார். பாப்பரசரால் அண்மையில்நியமிக்கப்பட்ட நீதியும் சமாதானமும் நிலைநாட்டும் குழுவுக்கு கருதினல் ரோய் அடிகள் தலைமை தாங்குகின்றார்.

# பெற்ரேரைப் பேணுதல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனே, "அம்மா தனியாக இருக்கிருர்கள் அவர்களுக்குச் சுகமுமில்லை; மேலும் இது தேவமாதாவின் மாதம் ஆதலால் தேவமாதாவுக்கு ஆராதனை செய்யவேண்டும்" எனக் கூறி விடைபெற்ருன். மற்றவர்கள் "அம்மாவின் பிள்ளை" எனக் கூறி நகைத்தனர்.

மாதங்கள் சென்றன. ஒரு நாள் இரவு நண்பர்கள் யாருமில்லாததால் எலியாசை அழைத்துக்கொண்டு ஏதும் படக்காட்சிக்குப் போகலாமென அமலன் எலியாசின் வீட்டுக்குச் சென்றுன். வீட்டின் வெளிவாசலைக்கடந்து யன்னல் அருகே வந்தவன் திகைத்து நின்றுன். உள்ளே அவன்கண்ட காட்சி அவனை மெய்சிலிர்க்க வைத்தது.

உள்ளே ஒரு தேவமாதா சுருபம்வீற்றிருந்தது. அதற்கு முன்னுல் மெழுகு வர்த்தி சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அச் சுருபத்திற்கு முன்னுல் எலியாஸ் முழந்தாட் படியிட்டுக்கொண்டு தனது இடதுகையால் தன் தாயை அணைத்தவாறு செபித்துக்கொண்டிருந்தான்.

எலியாஸ்பிரார்த்தனை முடிந்ததும் தன் தாயை அணைத்தவாறு அழைத்துச்சென்று படுக்கவைத்தான். படுக்கவைத்துவிட்டு திரும்பிய எலியாஸ் அமலன் திகைத்துப்போய் நிற்பதைக்கண்டு ஓடிச்சென்று அவனை வரவேற்ருன். திகைப்புடன் உள்ளே நுழைந்த அமலன் எலியாசிடம், "நீ இதில் இன்பமடைகிருயா?" என்று தாபத்துடன் கேட்டான். எலியாஸ் புன்னகைபுரிந்தவாறு "அமலா நம்மை இவ்வுலகைக் காணச் செய்தவர்கள் பெற்ரேர்தான். நமக்கு ஏதும் துன்பம் வாராமல் பாதுகாத்து இவ்வுலக இன்பங்களைப் பெறச் செய்தவர்கள் பெற்ரேர் தான். அவர்கள் இப்போது வயது போனதால் தங்கள் கடமைகளைச் செய்யமுடியாமல் போய்விடுகிறது. அவர்கள் நாம் சிறுவர்களாய் இருக்கும்போது நாம் நம் கடமைகளைப் பின்பற்ற எப்படி நம்மைத் தூண்டினுர்களோ அதேபோல நாமும் இப்போது தாளாத வயதில் அவதிப்படும் அவர்களுக்கு அவர்கள்கடமைகளைப்பின்பற்ற நாம் உதவிசெய்யவேண்டும். இச்சிறு தொண்டின்மூலம் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது தெரியுமா? நமக்கு இவர்கள் மாத்திரம் பெற்ரேர் அல்ல; கடவுளும் நமக்குப் பெற்ரேர் தான். அவர்களுடன் சிறுநேரம் சம்பாஷிக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சி வேறெந்த மகிழ்ச்சிக்கும் ஈடாகாது" என்று உணர்ச்சிவசப்பட்டவாறு பேசினுன்.

இப்போது அமலனின் முகத்தைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டுப் போவார்கள். அவ்வளவு பிரகாசமாய் இருந்தது. அமலன் தேவமாதாவின் சுருபத்தைப் பார்த்தபோது அது புன்னகைபுரிந்தவாறு காட்சியளித்தது. அமலன் எலியாசைக் கட்டி அணைத்து, "எனக்குப் புத்திவந்துவிட்டது நண்பா. எனக்குப் புத்திவரச்செய்த உன்னையும் இத் தேவதாயாரையும் என்றைக்குமே மறக்கமாட்டேன்" எனக் கூறிவிட்டுப் புன்னகையுடன் வெளியேறினுன்.

இரண்டு நாட்களாக அமலனைக் காணுமல் அவன் நண்பர்கள் அவனைத்தேடினுர்கள். அந்நேரத்தில் அமலன் தன் வீட்டில் தேவமாதாவின் சுருபத்தின்முன் தன் பெற்ரேரை இரு கைகளாலும் அணைத்தவாறு செபித்துக்கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஆடி — 1969**

| | | | |
|---|---|---|---|
| 6 | ஞாயிறு | பரி. ஆவி. விழா. பின் 6-ம் ஞாயிறு | [ப] |
| 7 | திங்கள் | புனித சிறில், மெத்தோதியுஸ் | [வெ] |
| 8 | செவ்வாய் | புனித எலிசபெத்தம்மாள் | [வெ] |
| 9 | புதன் | கிழமைப் பூசை | [ப] |
| 10 | வியாழன் | வேதசாட்சிகளான 7 சகோதரர் | [சி] |
| 11 | வெள்ளி | கிழமைப் பூசை | [ப] |
| 12 | சனி | புனித குவால்பர்ட் அருளப்பர் | [வெ] |

## காவலன் கருத்து

# சரீர நலன் வேண்டுதல்

சில தினங்களுக்குமுன் மடுத்திருப்பதியில் நிகழ்ந்த உற்சவத்தின்போது அங்கு ஆயிரக்கணக்கானோர் சமுகமளித்திருந்தார்கள். இங்ஙனம் மாதாவின் திருப்பதியை நாடிவந்துள்ளோரில் மாதாவின் மீதுகொண்ட உருக்கமான பக்தியால் தூண்டப்பட்டு வந்தோரும் இருப்பர். தாம் விரும்பிய லௌகிக நலன்களை வேண்டிப்பெறும் நோக்கத்துடன் வந்தவர்களும் இருப்பர். அதை வெறும் உல்லாசப் பிரயாணமாக நினைத்து வந்தவர்களும் இருப்பர். இவர்களுள் இரண்டாவது கூறப்பட்ட வகுப்பினரே பெரும்பான்மையானவர் என்று எண்ண இடமுண்டு. அதாவது தாம் தமக்கு நன்மை பயக்குமெனக் கருதும் ஏதாவதொன்றை மாதாவின் மூலமாகத் தேவனிடமிருந்து வேண்டிப் பெறும்பொருட்டு யாத்திரை செய்கின்றனர்.

தேவன் சகலவிதமான ஆன்மசரீர நலன்களையும் எமக்கு அருளுகின்றார் எனினும், சில காரியங்களை நாமே அவரிடம் வேண்டிப் பெற்றுக்கொள்வதும் அவரது நியதியின்பாற்பட்டதே. ஆனால், நாம் கேட்கும் காரியங்கள் எமது இரட்சணியத்துக்குத் துணை செய்வனவாக இருந்தால் மட்டுமே அவை எமக்கு அருளப்படும் என்பதை மறத்தல் ஆகாது. ஆகவே எந்த லௌகிக நலனையும் வேண்டும்போது "இது தேவனுடைய திட்டத்திற்குப் பொருந்தியதாகவும் எனது இரட்சணியத்துக்குத் துணைபுரிவதாகவும் இருப்பதாயின் அதனை நான் வேண்டுகிறேன்" என்னும் வசனத்தைச் சேர்க்கத் தவறலாகாது. எமக்கு நன்மையாகத் தோன்றுவது உண்மையிலேயே தீமை விளைப்பதாக இருக்கக்கூடும். இதையறிந்த தேவன் அதை எமக்குத்தர மறுக்கக்கூடும். எனவே கேட்ட வரம் கிடைக்கவில்லையென்று குறைபட்டுக் கொள்வது தகாது.

சிலர் தாமே முயன்று பலனடைய வேண்டிய காரியங்களில், முயற்சியின்றிச் சோம்பியிருந்துவிட்டு நேர்த்தியின்மூலம் பலனடையப் பார்க்கின்றனர். இவர்களுடைய மன்றாட்டு குறித்த பலனைத் தராது என்பது சொல்லாமலே விளங்கும். மக்கள் தமது கடமையை நிறைவேற்றும்போதுதான் தேவன் அதற்குரிய பலனைத் தருகின்றார்.

வேறு சிலர் தேவன்மட்டில் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் சிந்தியாது, தாம் கொளுத்தும் மெழுகுவர்த்திகளுக்கு பிரதிபாக தமது வேண்டுதல்களைக் கொடுப்பது தேவனுடைய கடமை என்பதுபோல், தாம் கேட்பது கிடைக்காவிடில் குறைப்பட்டுக் கொள்கின்றனர். இத்தகையோர் தாம் தேவகட்டளைகளை அனுசரித்தார்களா? பிள்ளைக்குரிய அன்புடன் தேவனை அணுகி வேண்டுதல்களைக் கேட்டார்களா? அல்லது தேவனுடன் பேரம் பேசினார்களா எனச் சிந்தித்துப் பார்த்தல் நன்று.

நாம் லௌகிக நலன் எதை வேண்டினும், அதைப் பெற்றால் தேவனுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம். பெறாவிட்டால் அதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம் என்ற மனப்பான்மையுடன் பிரார்த்தித்தல் வேண்டும்.

"நீ இறைவனைப்பற்றி அறியவிரும்பினால் உன்னைச்சுற்றி நோக்குவாயாக; அவர் சிறுவருடன் விளையாடிக் கொண்டிருப்பதையும், மலர்களிடையே புன்னகைத்துக் கொண்டிருப்பதையும் காண்பாய்."

—புலவரொருவர்

# இந்தக் கல்லின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்

சென்ற ஆனி 29ஆம் திகதி அர்ச். பேதுரு பாவுலு அப்போஸ்தலர்களின் திருநாளைக் கொண்டாடினோம். அத் திருநாளன்று வாசிக்கப்பட்ட சுவிசேஷத்தில் மத். 16ஆம் அதி. நாம் இவ் வசனங்களைக் காண்கிறோம். நமதாண்டவராகிய யேசுக்கிறிஸ்து அர்ச். இராயப்பரைப் பார்த்து: "நானும் உனக்குச் சொல்லுகிறேன்: நீ **கல்லாய்** இருக்கிறாய், இந்தக் **கல்லின்மேல்** என் திருச்சபையைக் கட்டுவேன். நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டா. மோட்ச இராச்சியத்தின் திறவுகோல்களையும் உனக்குத் தருவேன்; பூலோகத்தில் நீ எதைக் கட்டுவாயோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீ பூலோகத்தில் எதை அவிழ்ப்பாயோ அது பரலோகத்திலும் அவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று திருவுளம்பற்றினர். இப் புனித வசனங்களை நாம் ஆராய்ந்து பார்ப்பின் சம்பேதுருவானவருக்கும் திருச்சபைக்குமுள்ள தொடர்பையும், அவருக்குள்ள அதிகாரத்தையும் நாம் நன்குணரக்கூடியதாயிருக்கிறது.

எமது திருமீட்பர் தமக்குப் பின் திருச்சபைக்குச் சேர்ந்த சகல மந்தைகளையும் இடைவிடாது பரிபாலித்துக் காப்பாற்றும் பாரிய பொறுப்பை அர்ச். இராயப்பரிடம் ஒப்படைத்தார், இது ஓர் அதிகார தோரணையில் நடைபெறும் ஆட்சியன்று; ஆனால் அன்பின் அடையாளமாக விளங்கும் அதிகார பரிபாலனம் என்றே கூறவேண்டும்.

இவ்வாறு எமது திருமீட்பர் திருச்சபையை ஆண்டுநடத்தும் பொறுப்பைச் சம்பேதுருவானவருக்குக் கொடுத்த சம்பவத்தை நாம் அருளப்பரின் சுவிசேஷத்தில் 21ஆம் அதிகாரத்தில் வச. 15—17. மிகவும் விளக்கமாகக் காணக்கூடியதாயிருக்கிறது. எமதாண்டவர் தமது உத்தானத்தின்பின் மூன்றாம்முறை தமது சீஷர்களுக்குத் தோன்றி அவர்களுடன் பந்தியமர்ந்து அப்பத்தையும் மீனையும் அருந்தியபின் சீமோன் பேதுருவைப்பார்த்து: "யோவான் குமாரனாகிய சீமோனே! இவர்களிலும் (அதாவது ஏனைய அப்போஸ்தலர்களிலும்) அதிகமாய் நீ என்னில் அன்புகூருகிறாயா? என்றார். அர்ச். இராயப்பரோ, "ஆம் ஆண்டவரே! உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியும்" என்றார். அவர் "என் ஆட்டுக்குட்டிகளைப் போஷிப்பாயாக" என்றார். இரண்டாம்முறையும் அதே வினாவைக் கேட்டு அதே விடையை இராயப்பரிடம் பெற்றபின் எமதாண்டவர் "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று அவருக்குக் கூறினார். மூன்றாம் முறையும் அதேவினாவைக் கேட்டு அதே விடையை இராயப்பரிடம் பெற்று "என் ஆடுகளைப் போஷிப்பாயாக" என்று அவருக்குக் கூறினார்.

பல வேதபாரகர் எமதாண்டவர் இராயப்பருக்குக் கொடுத்த பொறுப்புவாய்ந்த கடமையை வற்புறுத்தி அவரதை நன்குணரப்பண்ணும்படியே இவ்வாறு மும்முறை அவருக்கு இடித்துரைத்தாரென்று விளக்குகின்றனர்.

— பி. சவரிமுத்து

ஆகவே இராயப்பருக்குத் திருச்சபையின் மந்தைகளை மேய்க்கும் முழுப் பொறுப்பையும் அன்றுதொட்டுப் பரம தேவன் கொடுக்கச் சித்தங்கொண்டார். எவ்வாறு ஒரு நல்ல மேய்ப்பன் தனது மந்தைகளைத் தனது உயிரைப்போல் பாதுகாத்துக் காப்பாற்றி வருகிறானோ, அதுபோலவே அர்ச். இராயப்பரும் தனது மந்தைகளைப் பரிபாலித்துப் போஷித்து (அரிய போதனைகளால்) வரவேண்டிய கடமை பூண்டவராயிருக்கிறார். "நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டா" என்ற எமது திருமீட்பர் கூறிய வார்த்தைகளில் அர்ச். இராயப்பருக்குத் தேவன் கொடுத்த "**வழுவாவரம்**" அடங்கியிருக்கிறது. இவ் வரத்தின் காரணமாக "விசுவாச சத்தியங்களிலும் நல்லொழுக்க விதிகளிலும்" எமது திருச்சபையின் தலைவரான பாப்பரசர் என்றும் தவறமாட்டார் என்று தேவன் தாமே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

எமது திருச்சபையும் அது செய்துவரும் மனு மீட்புத் தொழிலும் எல்லாக் காலத்துக்கும் எல்லாச் சனங்களுக்கும் அவசியமாயிருப்பதால் எந்த நூற்றாண்டிலுமுள்ள எந்தப் பாப்பானவருக்கும் இந்த வழுவாவரம் தேவனால் அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

மேலும் திருச்சபையின் புனித தொண்டு பாவிகளாகிய எங்களைப் பரலோகத்துக்கு இட்டுச் செல்வதாயிருப்பதன் காரணமாக மக்களின் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைத் திருச்சபையின் தலைவராகிய பாப்பரசருக்கும் அவரால் அபிஷேகப்பண்ணப்பட்ட மேற்றிராணிமார் குருமாருக்கும் இறைவன் கொடுத்திருக்கிறார். எனவே இவ்வதிகாரம் வம்சவரிசையாக எமது முதல் பாப்பரசராகிய அர்ச். இராயப்பரிலிருந்து அவருக்குப்பின் 263ஆம் பாப்பரசராகத் தற்போது விளங்கும் ஆறாவது சின்னப்பரிடம் இருக்கிறது. இவருடன் ஒன்றித்திருக்கும் ஏனைய ஆயர்கள், மேய்ப்பர்கள், குருக்கள்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## 2ஆம் வத்திக்கான் சங்கம்

### திருச்சபை:

### சகோதரத்துவத்தின் அடையாளம்

நற்செய்தியின் ஒளியைப்
பாரெங்கும் பரப்புவதும்
பல்வேறு நாடு, இனம், பண்பாடு
முதலியவற்றைச் சேர்ந்த
மக்கள் அனைவரையுங்
ஒரே ஆவியானவருக்குக்கீழ்
ஒற்றுமைக்குக் கொணருவதும்
திருச்சபையின் பணி.
இப்பணி காரணமாகச்
சகோதரத்துவத்தின் அடையாளமாகத்
திகழ்கிறது திருச்சபை...
திருச்சபையின் இப்பணியை நிறைவேற்ற
வேறுபாடுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு
திருச்சபைக்குள்ளேயே
ஒருவருக்கு ஒருவர் கொள்ளவேண்டிய
மதிப்பு, பணிவு, ஒற்றுமை ஆகியவற்றை
வளர்க்கவேண்டும்.
இவ்வாறு,
இறைவனின் ஒரே மக்களாகிய அனைவரும்
மேய்ப்பராயினும் சரி,
மற்ற கிறிஸ்தவ விசுவாசிகளாயினும்சரி,
என்றும் நிறைந்த பயன்
அளிக்கும் முறையில்
தமக்குள்ள உரையாடலில்
ஈடுபட இயலும்.
ஏனெனில்,
விசுவாசிகளை ஒன்றுபடுத்தும் பிணைப்புக்கள்
அவர்களைப் பிரித்து வைப்பனவற்றைவிட
வலிமைவாய்ந்தன.
இன்றியமையாதவற்றில் ஒற்றுமையும்,
ஐயத்திற்கிடமானவற்றில் தன்னுரிமையும்,
எல்லாவற்றிலும்
பரம அன்பும் விளங்கட்டும்.

(இன்றைய உலகில் திருச்சபை 92)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆடி ஆடி மீ 5ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org